# கூர்மை

## பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை

**2023**

வெளியீடு 05



ISSN 2279 - 3607

பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## ஆலோசகர்

கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ்
துறைத் தலைவர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## ஆசிரியர்

செல்வி. வசந்தா வினாயகமூர்த்தி
விரிவுரையாளர் (தகுதிகாண்),
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## ஆசிரியர் குழு

கலாநிதி. சரவணமுத்து ஜெயராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர். தங்கமணி பவன்
பொருளியல் துறை பேராசிரியர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

திருமதி. சறோஜினி மகேஸ்வரநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

திரு. குகதாசன் புஸ்பாகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்



# கூர்மை

பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை

வெளியீடு (5), 2023

## வெளியீடு

பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

# மதிப்புரைஞர்கள் (Reviewers)

**கலாநிதி. சரவணமுத்து ஜெயராஜா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர். தங்கமணி பவன்**
பொருளியல் துறை பேராசிரியர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**திரு. குகதாசன் புஸ்பாகரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

**கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

# பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது நீண்டகாலமாக கூர்மை எனும் பொருளியல் செய்தி ஏட்டினை வெளியிட்டமை யாவரும் அறிந்ததே. தற்போது கூர்மை வெளியீடானது கடந்த நான்கு வருட காலமாக பொருளியல் ஆண்டுச் சஞ்சிகையாக வெளியிடப்படுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன். பொருளியல் பாடத்தினைப் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்களும், பொருளியல் பாடத்தினை விஷேட கற்கை நெறியாக பயிலும் மாணவர்களும் மற்றும் பொருளியலில் ஆர்வமுடையோரும் இவ்வெளியீட்டின் மூலம் நிறைந்த பயனைப் பெறுகின்றனர். பொருளியல் துறையின் சமூகம் சார் செயற்பாடுகளின் ஓர் சிறிய முயற்சியாக கூர்மை சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

பொருளாதார விடயங்களை அறிந்து கொள்வதில் பலரும் ஆர்வமாகவுள்ளனர். பொருளியல் கோட்பாட்டு அம்சங்கள் மாணவர்களுக்கு அவசியமாகிலும் நடைமுறைப் பொருளாதார கருத்துக்களையும் விடயங்களையும் தெரியப்படுத்துவதும் மேலும் பயனுடையதாகும். இம்முறை இப்படைப்பு, காலத் தேவைக்குகந்தவாறு சீனாவின் அபிவிருத்தி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, நிலைபெறத்தக்க நிதியின் வகிபாகம், நாணயமாற்று வீதம் மற்றும் அமெரிக்காவின் சுங்கத் தீர்வை விதிப்பு என பல பகுதிகளைத் தழுவியதான பொருளியல் கட்டுரைகளை துறைசார் வல்லுனர்களிடமிருந்து பெற்று வெளிவருவதானது பாராட்டுக்குரியதாகும். ஒரு சிறந்த அங்கமாக வெளிவருகின்ற இப்படைப்பு அனைவராலும் வரவேற்கப்படும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

நிகழ்நிலை வெளியீடாக வெளிவரும் இச்சஞ்சிகையின் முழுமையான பிரசவிப்புக்கு கைகொடுத்த அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். குறிப்பாக இச்சஞ்சிகையின் ஆசிரியருக்கு எனது வாழ்த்துக்கள். இதன் வளர்ச்சிக்கு அனைவரும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பேராசிரியர். ந. இராஜேஸ்வரன்**
*பீடாதிபதி,*
*வர்த்தக முகாமைத்துவ பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.*

# துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சமூகத்தின் முன்மாதிரி அங்கமாகத் திகழும் பல்கலைக்கழகங்கள் வெறுமனே கற்றல் நடவடிக்கையுடன் மட்டுமல்லாது தாம் கற்றவற்றையும் கேட்டவற்றையும் உலக சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு ஊடகமாகத் திகழ்கின்றது.

அந்தவகையில் எமது வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் மட்டுமல்லாது புறக்கிருத்திய செயற்பாடுகளிலும் தனது அதீத கவனத்தை ஈர்த்துள்ளது. அதன் ஒரு பகுதியாக 1992ஆம் ஆண்டிலிருந்து ‘கூர்மை’ செய்தியேடானது தனது இருபத்தி ஏழு இதழ்களை கிரமமாக வெளியிட்டுள்ளது. இதன் ஒரு பரிணாமமாக கூர்மை இதழானது சமானர்களின் மதிப்புரையுடன் (Peer Review) கூடிய வருடாந்த சஞ்சிகையாக வளர்ந்து வரும் பாதையில் நிலைத்து நிற்கும் போக்கை எட்டியுள்ளது.

இச் சஞ்சிகையானது பொருளியல் துறைசார் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப்பரீட்சையினை எதிர் கொள்வோருக்குத் தேவையான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைப் பொருளியல் அறிவினை வழங்குவதில் தன்னார்வத்துடன் பங்களிப்புச் செய்துவருகின்றது. அந்தவகையில் சமூதாய நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்குப் பங்களிப்புச் செய்துவரும் எமது விரிவுரையாளர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி. (திருமதி). ஜெயப்பிரபா சுரேஸ்**
*துறைத் தலைவர்,*
*பொருளியல் துறை,*
*வர்த்தக முகாமைத்துவ பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

# ஆசிரியர் செய்தி

**கூர்மையின் வாசகர்களே..**

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் கற்கையை நோக்காகக் கொண்டு, கட்டுரைகள், எண்ணக்கரு விளக்கங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் உள்ளிட்ட பல விடயங்களை தாங்கிய கூர்மை, செய்தி ஏடாக வெளிவந்து, இருபத்து ஏழு சிறப்பு இதழ்களை வெளியிட்டுள்ளதில் எமது பொருளியல் துறை சார்பாக மகிழ்ச்சியடைகின்றோம்.

இவ்வாண்டு, கூர்மை திறனாய்வுடன் கூடிய வருடாந்த சஞ்சிகையாக பொருளியல், முகாமைத்துவம் மற்றும் வர்த்தக துறைசார் சிறப்புக் கட்டுரைகளை உள்ளடக்கி நான்காவது இதழாக வெளிவருகின்றது. மேலும் நிகழ்நிலை வெளியீடான இச்சஞ்சிகை, மாணவர் பக்கம் மற்றும் புள்ளிவிபர இணைப்புக்கள் உள்ளடங்கலாக பல்வேறு பொருளியல்சார் அம்சங்களையும் வெளிக்கொணர்கின்றது. கூர்மை சஞ்சிகையானது இத்துறைசார் மாணவர்களுக்கு மாத்திரமின்றி ஆசிரியர்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இதுவரை காலமும் கூர்மை செய்தி ஏடு இருபத்து ஏழு இதழ்களை கடந்து கிரமமாக வெளிவருவதற்கு பங்களித்த அனைத்து நபர்களுக்கும், வாசகர்களாகிய உங்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் காலங்களிலும் கூர்மையானது ஆண்டுச் சஞ்சிகையாக வெளிவருவதற்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து தங்கள் ஆதரவினை வேண்டிநிற்பதுடன், இச்சஞ்சிகை பற்றிய தங்களின் மேலான கண்ணோட்டத்தையும் எதிர்பார்க்கின்றோம்.

**செல்வி. வி. வசந்தா**
*ஆசிரியர்,*
*கூர்மை,*
*பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை,*
*பொருளியல் துறை,*
*வர்த்தக முகாமைத்துவ பீடம்,*
*கிழக்குப் பல்கலைக்கழகம்.*

# பொருளடக்கம்

**மதிப்புரைஞர்கள் (Reviewers)** ........ i

**பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி** ........ ii

**துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி** ........ iii

**ஆசிரியர் செய்தி** ........ iv

**பொருளடக்கம்** ........ v

## கட்டுரைகள்

**சீனாவின் அபிவிருத்தி அதிசயம் - ஓர் பார்வை** ........ 1

*திருமதி. நிரோஜினி அசோக்குமார்*

**பொருளாதார வளர்ச்சியும் இலங்கையில் அதனுடைய அண்மைக்காலப் போக்கும் - விமர்சனரீதியான பார்வை** ........ 15

*திருமதி. ஸியாளினி ஹேமப்பிரகாஷ்*

**வங்கித் தொழில்துறை வளர்ச்சியில் நிலைபெறத்தக்க நிதியின் வகிபாகம்** ........ 39

*திருமதி. சுஜேந்தினி யசாகன்*

**நாணயமாற்று வீதம்** ........ 43

*செல்வி. திஷோபனா பிரட்மன்*

**வர்த்தகப் பாதுகாப்புவாத கண்ணோட்டத்தில் எ.்.கு மற்றும் அலுமினியம் மீதான அமெரிக்காவின் சுங்கத் தீர்வை விதிப்பு**.........................................51

*செல்வி. வசந்தா வினாயகமூர்த்தி*

**இணைப்பு 01: பொருளியலாளர்**..........................................................................60

*ஜேனட் லூயிஸ் யெல்லன் (Janet Louise Yellen)*

**இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள்**....................................................62

*இலங்கையின் மொத்தச் சனத்தொகை*

*இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த வீதம்)*

*இலங்கையின் மொத்த வேலையின்மை (மொத்த ஊழியப்படையின் வீதம்)*

*இலங்கையின் பணவீக்கம் - நுகர்வோன் விலைகள் (வருடாந்த வீதம்)*

*இலங்கையின் தனிநபர் பணவனுப்பல்களின் பெறுகை (மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம்)*

01

# சீனாவின் அபிவிருத்தி அதிசயம் - ஓர் பார்வை

திருமதி. நிறோஜினி அசோக்குமார்
தற்காலிக உதவி விரிவுரையாளர்,
பொருளியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

சீனா என்று பொதுவாக அழைக்கப்படும் சீன மக்கள் குடியரசு, கிழக்காசியாவிலுள்ள ஒரு நாடாகும். ஆசியாவிலேயே பரப்பளவில் மிகப்பெரிய நாடான சீனா, உலகளவில் ரஷ்யா, கனடா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாகப் பரப்பளவின்படி, மூன்றாவது பெரிய நாடாகும். 1,306,313,812 மக்கள் வாழும் சீனா, உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் முதலிடம் வகிக்கின்றது. சீனாவின் தலைநகர் பீஜிங் ஆகவும் அந்நாட்டின் வர்த்தகத் தலைநகராகச் சாங்காயும் காணப்படுகிறது. உலகின் மிகப் பழைய நாகரிகங்களில் ஒன்றான பண்டையச் சீன நாகரிகம், வட சீனச் சமவெளியூடாகப் பாயும் மஞ்சள் ஆற்றங்கரையில் உருவாகி வளர்ந்தது. இந்நாடு நான்காயிரம் ஆண்டுகளாக, சியா வம்சம் தொடக்கம் சிங் வம்சம் வரையான அரச வம்சங்களால் ஆளப்பட்டு வந்தது. இது 1911ஆம் ஆண்டில் சீனக் குடியரசு உருவாக்கப்பட்டதுடன் முடிவடைந்தது.

இத்தகைய பழைமை வாய்ந்த வரலாற்றினைக் கொண்ட சீனா கடந்த 40 ஆண்டுகளுக்குள் உலக வல்லரசு நாடுகளில் இரண்டாம் இடத்தை பிடித்துக்கொண்டது ஒரு அதிசயமும் ஆச்சரியமும் கொண்ட விடயமாகும். இன்று உலகின் தன்னிகரற்ற சக்தியாகவும் பல துறைகளில் முன்னோடியாகவும் சீனா திகழ்கிறது. ஆனால், இது எவ்வாறு சாத்தியமாகியது என்ற கேள்வி இயல்பானதே. உலகின் பல நாடுகள் சீனாவைப் போலவே மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், பல்வேறு கோணங்களில் வெற்றி பெற்று இன்று உலகப் பொருளாதாரத்தில் தனக்கென இரண்டாம் இடத்தை தக்க வைத்துக்கொண்டிருக்கிறது

சீனா. மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த அபார வளர்ச்சியடைந்தது எப்படி? எனும் கேள்வி ஏனைய உலக நாடுகளும் தங்களிடையே கேட்டுக்கொள்ளும் கேள்வியாகவே காணப்படுகின்றது. இதற்கான பதிலினை அதாவது சீனாவின் பொருளாதார ரீதியான அசுர வளர்ச்சிக்கான காரணங்களையும் வளர்ச்சியடைந்து வந்த காலகட்டங்களையும் ஒரு விமர்சன ரீதியான பார்வையுடன் கலந்துரையாட முடியும்.

## சீனத்தலைவர்களின் செயற்பாடுகள்

சீனா பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்து வந்த ஆரம்பகட்டமாக மாவோ செதுங்கால் வழிநடத்தப்பட்ட சீனப்புரட்சி 1949ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வெற்றிபெற்றதனைப் பார்க்க முடியும். அன்றுதான் மக்கள் சீனக் குடியரசு உருவாகியது. இதைச் சாத்தியமாக்கியது சீனப்புரட்சியே. இன்று சீனா அடைந்துள்ள விருத்தியும் செழுமையும் சீனப்புரட்சியின் பாரம்பரியத்தில் வந்தவை. தத்துவார்த்த அடிப்படையிலும் நடைமுறை ரீதியிலும் மார்க்ஸியத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி, செழுமைப்படுத்திய பெருமை மாவோவையும் சீனப்புரட்சியையுமே சாரும். இன்று சீனா எழுந்து நிற்பதற்கான அடிப்படைகள், மாவோவின் காலத்தில் இடப்பட்டவை. அவை உள்ளூராட்சி அமைப்புக்களாக இருக்கட்டும், சீனாவின் அயலுறவுக் கொள்கையாக இருக்கட்டும் அனைத்தும் கவனமாக மக்கள் நல நோக்கில் சீனாவால் முன்னெடுக்கப்பட்டவை ஆகும்.

அடுத்த காலகட்டத்தை பார்க்கும்போது சீனாவின் எழுச்சியின் கதை, இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சிக் கதை அல்ல. ஆனால் மிகுந்த கட்டுப்பாட்டுடன் இருந்த பொருளாதாரத்திலிருந்து விடுபட்டு, சந்தைப் பொருளாதாரத்திற்கு மாறிய பொருளாதாரப் புரட்சியின் கதை என்றே கூற வேண்டும். அதாவது உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சீரான முன்னேற்றத்தை மேற்கொண்ட சீனா, சந்தையின் மீதான நம்பிக்கையையும் விட்டுவிடவில்லை. சீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, வெளிநாட்டு முதலீடுகளை எங்கு முதலிடலாம், எங்கு முதலிடக் கூடாது என்பதில் கவனமாக முன்னுரிமை கொடுத்து முடிவெடுத்தது சீனா. இதற்காக சிறப்பு

பொருளாதார மண்டலம் ஒன்று உருவாக்கப்பட்டது. தெற்கு கரையோர மாகாணங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக தேர்வு செய்யப்பட்டன. கம்யூனிச சோசலிச அரசியல் சூழலில் வலுவான மாற்றத்திற்கான அடித்தளத்தை அமைத்தார் டெங் ஷியாபிங். அதன் முதல் கட்டமாக சோவியத் பொருளாதார மாதிரியின் அமைப்பை முற்றிலுமாக மாற்றியமைத்த அவர் பின்னர் சீனாவின் தேவைகளுக்கு ஏற்ப படிப்படியாக, சோசலிச அடிப்படையில் பொருளாதாரத்தில் நவீனமயமாக்கல் செயல்முறையை தொடங்கினார். 1978ஆம் ஆண்டு டெங்ஸஜயாவோ பிங் தொடங்கிய பொருளாதாரப் புரட்சி 2018ஆம் ஆண்டில் 40 ஆண்டுகள் பயணித்து இன்று சீனா உலக அளவில் பெற்றிருக்கும் மகத்தான இடத்தை அடைந்திருக்கிறது. இதை சீனாவின் இரண்டாவது புரட்சி என்று சொல்கிறார் டெங்ஸஜயாவோ பிங். இந்த பொருளாதார சீர்திருத்தத்திற்கு பிறகே உலக அளவில் பெரிய பொருளாதார சக்தியாக வலுவுடன் தலை நிமிர்ந்து நிற்கிறது சீனா.

இன்றைய நிலையில் சீனாவிடம் அதிக அளவிலான அந்நியச் செலாவணி இருப்பு (3.205 ரில்லியன் அமெரிக்க டொலர்கள்) உள்ளது. சர்வதேச அளவில் இரண்டாவது பெரிய நாடாக திகழும் சீனா, நேரடி அந்நிய முதலீட்டை ஈர்க்கும் உலகின் மூன்றாவது பெரிய நாடாக உள்ளது. ஆனால் 1978ஆம் ஆண்டில் டெங்ஸஜயாவோ பிங் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொண்டபோது உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்களிப்பு 1.8% ஆக இருந்தது. 2022ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரத்தில் சீனாவின் பங்கு 18.5% ஆக உயர்ந்துவிட்டது.

சீனப் பொருளாதாரம் வளர்ந்துவரும் பொருளாதாரம் மட்டுமல்ல, தனது வலிமையான கடந்த காலத்தை நோக்கி மீண்டும் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். "Cracking the China Kandrum: Why Conventional Economic Wisdom Is Wrong" என்ற புத்தகத்தில் சீன எழுத்தாளர் யூகோன் ஹீவாங் என்பவர் டெங்ஸஜயாவோ பிங் மாபெரும் சீர்திருத்தவாதி மட்டுமல்ல, பொறுப்பானவரும் கூட என்று குறிப்பிட்டுள்ளார். டெங்ஸஜயாவோ பிங் தொடங்கிய சமுதாய பொருளாதார சீர்திருத்தம் உலக சரித்திரத்தில் இதற்கு

முன் மேற்கொள்ளப்படவில்லை. 1978 - 2016 ஆண்டுகளுக்கு இடையில் சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3,230% அதிகரித்தது. இதே காலகட்டத்தில் 70 கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு வரப்பட்டனர். 38.5 கோடி மக்கள் நடுத்தர வர்க்கத்தினராக உயர்த்தப்பட்டனர். சீனாவின் வெளிநாட்டு வர்த்தகம் 17,500 சதவிகிதம் அதிகரித்தது. 2015ஆம் ஆண்டளவில் சீனா வெளிநாட்டு வர்த்தகத்தில் உலக அளவில் முன்னிலை பெற்றது. 1978ஆம் ஆண்டில், ஆண்டு முழுவதிலும் செய்த வர்த்தகத்தை தற்போது இரண்டே நாட்களில் செய்கிறது சீனா. சீன கம்யூனிஸ்ட் கட்சி கூட்டு தலைமையின் கீழ், சீனாவில் சமூக பொருளாதார மாற்றத்துக்கான துரிதமான செயல்முறையைத் தொடங்கினார் டெங்ஸஜயாவோ பிங். 1960 மற்றும் 1970களில் வாங்கிய பல பின்னடைவுகளுக்குப் பிறகு மாவோவின் பாணியைப் பின்பற்றுவதில் எச்சரிக்கையையும் அவர் கடைபிடித்தார். சர்வதேச உறவுகள் தொடர்பாக சில கொள்கைகளை வைத்திருந்த டெங்ஸஜயாவோ பிங், தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளமாட்டார். சீனப் பொருளாதாரத்தை துரித கதியில் உயர்த்துவதிலேயே அவரது கவனம் முழுமையாக இருந்தது.

மேலும் சீனாவை வலுவாக மாற்றியவர்களைப் பற்றி பேசும்போது மாவோ செதுங் டெங்ஸஜயாவோ பிங் வரிசையில் அடுத்ததாக தற்போதைய தலைவர் ஸி ஜின்பிங்கை கூறமுடியும். டெங்ஸஜயாவோ பிங் பொருளாதாரப் புரட்சி தொடங்கிய 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஷி ஜின்பிங் போன்ற ஒரு வலுவான தலைவரின் தலைமையில் சீனா மீண்டும் முன்னோக்கி நகர்கிறது. உற்பத்தி அடிப்படையில் சீனாவின் பொருளாதாரத்தை வலுவாக்க விரும்புகிறார் ஷி ஜின்பிங். அதற்காக அவர் டெங்ஸஜயாவோ பிங் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்கிறார். அதன்படி பொருளாதாரத்தை திறந்துவிடுவது, பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வது உட்பட பல முயற்சிகளை மேற்கொண்டு அரசாங்கத் துறைக்கு ஷி ஜின்பிங் கடிவாளம் போட்டார். உதாரணமாக, அரசாங்க நிறுவனங்களை கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கி, நிர்வாகத்தின் பொறுப்பில் முழுமையாக ஒப்படைத்தார். அதேபோல் தொண்டு நிறுவனங்கள் மீதும் கடும் இறுக்கத்தன்மையைக் காட்டினார். பல மனித உரிமை

ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர். இவரின் தலைமைத்துவத்தின் கீழ் 2014இற்குப் பிறகு சீனாவில் தனியார் முதலீடு துரித வளர்ச்சி கண்டுள்ளது. உலகம் முழுவதும் சீனாவின் வர்த்தகத்தை விரிவாக்கினார் ஷி ஜின்பிங். மேலும் பெல்ட் அன்ட் ரோட் திட்டம் (The Belt and Road Initiative (BRI) எனப்படும் பட்டுசாலை மற்றும் பொருளாதார வழித்தட திட்டத்தின் கீழ், ஆசியா, ஐரோப்பா, மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களை கட்டமைப்பு மற்றும் வணிக வலைப்பின்னல் மூலம் இணைக்கும் திட்டத்தை ஷி முன்னெடுத்திருக்கிறார். இவ்வாறு சீனாவை மேலும் அபிவிருத்தி செய்வதில் தற்போதைய சீனத் தலைவரின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

மேற்கூறிய விளக்கத்தின் மூலம் புலனாவது என்னவெனில் சீனாவின் அதிரடி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் காரணி சீனாவில் அடுத்தடுத்து தோன்றும் அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களின் செயற்பாடுகளே என்பதற்கு மாற்றுக்கருத்தில்லை.

### உலக வர்த்தக அமைப்புக்களுடனான உறவு

மேலும், சீனாவின் துரித வளர்ச்சி பற்றி நோக்கும்போது உலக வர்த்தக அமைப்புக்களில் சீனா தன்னை இணைத்துக்கொண்டது அதன் வளர்ச்சிப்பாதைக்கு மேலும் வழிவகுத்தது எனலாம். 1949ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சீனா கம்யூனிஸ ஆட்சி நாடாகவே காணப்பட்டது. அச்சமயத்தில் சீன ஆட்சியாளர்களுக்கு தமது நாடு உலகில் எந்த நாட்டுடனும் உறவினைக் கொண்டிருக்காது அனைத்தையும் தமது நாட்டுக்குள்ளே தாமே கையாளவேண்டும் என்ற நிலைப்பாடு காணப்பட்டது. பொதுவாக காலணித்துவத்தின் அனுபவத்தைப் பெற்றிருந்த சீனா போன்ற கம்யூனிஸ நாடுகள் தமது நாட்டின் வளங்களையும் மூலங்களையும் ஏகாதிபத்திய நாடுகள் எடுத்துச் சென்றுவிடும் என்ற நிலைப்பாட்டிலேயே செயற்பட்டன. இதன் காரணத்தால் வெளிநாட்டு வர்த்தகம் என்பதை முழுமையாக எதிர்த்தன. ஒருவேளை வெளிநாடுகளுடன் வர்த்தக ரீதியான உறவுகளைப் பேண விரும்பினால் சோவியத் குடியரசுடன் மட்டுமே அத்தகைய உறவுகளை மேற்கொண்டன.

குறிப்பாக சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் (சோவியத் குடியரசாக இருந்து மாற்றமடைந்தது) இடையில் வர்த்தக ரீதியாக உறவுகள் வலுவாக காணப்பட்டபோதும் சுமார் பத்தாண்டுகள் வரையில்தான் அந்த உறவுகள் நீடித்திருந்தன. அதன் பின்னர் அந்த உறவுகளில் முரண்பாடுகள் ஏற்படவே சீன ரஷ்ய உறவுகள் முறிவடைந்தன. இந்த நேரத்தில்தான் சீனா தன்னுடைய வெளியுறவுக் கொள்கைகளை மீள்பரிசீலனை செய்ததோடு தொடர்ந்தும் ரஷ்யாவுடன் தன்னை மட்டுப்படுத்தாது அடுத்த கட்டங்களை ஆராய ஆரம்பித்தது. இதனால் வர்த்தக ரீதியில் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் பனிப்போர் ஆரம்பமானது. சீன – ரஷ்ய பனிப்போரை அவதானித்த அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரிச்சர்ட் நிக்ஸன் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி சீன – ரஷ்ய உறவுகளை நிரந்தரமாகப் பிரிக்க வேண்டும் என்ற திட்டத்தைத் செயற்படுத்துவதற்காக பாகிஸ்தான் வழியாக சீனாவுக்கு இரகசியமான பயணத்தை முதன்முதலாக மேற்கொண்டார். இதன்மூலம் அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையில் 20 ஆண்டு காலமாக நீடித்த தொடர்பாடலற்ற நிலைமை முடிவுக்கு வந்தது. இந்த விஜயத்தின் பின்னர் புதிய சீனக் கொள்கை என்ற தொனியுடன் உறவுகளை நிக்ஸன் ஆரம்பித்தார். சந்தேகத்துடன் மாறிய சிந்தனையை இத்தருணத்தில்தான் சீனாவின் ஜனாதிபதியாக இருந்த டெங்ஸஜயாவோ பிங் என்பவர் சிந்திக்க தொடங்கினார். வெளிநாடுகளுடன் உறவுகளை வைப்பதால் சீனாவுக்கு நன்மை ஏற்படுமா என்ற சந்தேகத்துடன் ஒருதடவை முயற்சி எடுத்துப் பார்ப்போம் என்ற முடிவுக்கு வந்தார்.

இம்முடிவின்படி உலக வர்த்தக அமைப்புடன் ஒப்பந்தம் செய்வதற்கு முன்னதாக சீனா முக்கிய சில விடயங்களை முன்னெடுத்தது. சீன முதலீடுகளில் தனியார் சொத்துக்கள் காணப்பட்டிருக்கவில்லை. அரசாங்கத்தின் மூலங்களும் வளங்களுமே காணப்பட்டன. மக்களிடத்தில் மிகையான சேமிப்பு காணப்பட்டாலும் வங்கிகளில் பணத்தை சேமிக்கும் பழக்கத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை. அரசாங்கம் சேமிப்புக்கான வழிகளை ஏற்படுத்தினாலும் அவர்கள் முதலிடுவதற்குத் தயாராக இல்லை. அது அபிவிருத்தி குறைந்த காலம் என்பதால் தமது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையுடனேயே இருந்தார்கள். எனினும் டெங் சியோ பிங்

மக்களுக்கான புரிதலை ஏற்படுத்தினார். மக்களுக்கான உத்தரவாதத்தையும் அவரே அளித்தார். அத்துடன் ஒவ்வொருவரின் பெயரிலுமே நிதியை வைப்பிலிடுங்கள் என்றும் அறிவுரை வழங்கினார். இதன் காரணத்தால் சீனாவில் 90 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் தாமாக முன்வந்து வங்கிகளில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்தனர். இதன் காரணத்தால் பெருந்தொகையான நிதி சீன அரசிற்கு கிடைத்தது. அந்த நிதியைப் பயன்படுத்தி முழுநாட்டிலும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினார்கள். போக்குவரத்து, தொடர்பாடல், கட்டட வசதிகள், மின்சாரம் என அனைத்து விடயங்களையும் உயர்த்தினார்கள். தம்முடைய உற்பத்திப்பொருட்கள், தொழிலாளர்கள் என அனைத்தும் உள்நாட்டு வளங்களை மட்டுமே பயன்படுத்தி உட்கட்டமைப்பினை உயர்ந்த தரத்தில் கட்டியெழுப்பினார்கள்.

இவ்வாறான மாற்றத்தின் மூலமே சீனா முதன்முதலாக சர்வதேச வர்த்தகம் மற்றும் சர்வதேச பொருளாதாரம் ஆகியவற்றுக்குள் காலடியெடுத்து வைத்தது. முன்னதாகவே சீனா தனது நாட்டில் கைத்தொழில்துறை, சுங்கத்தொழில்துறை போன்றவற்றில் அதிகளவு முதலீடுகளை செய்திருந்தமையால் அவ்வாறான துறைகள் அதீத வளர்ச்சி மட்டத்திலிருந்தன. அதீத உள்நாட்டு முதலீட்டின் காரணமாக சீனாவின் உள்ளக கட்டமைப்பில் பாரிய வளர்ச்சியும் ஒருங்கே காணப்பட்டது. தன்னை சுயபரிசீலனைக்குட்படுத்திய சீனா மிகை முதலீடுகளை நாட்டுக்குள் முதலிட்டுவிட்டோம் என்பதையும் உணர்ந்து கொண்டது. இதன் காரணமாக 1985ஆம் ஆண்டு சீனா உலக வர்த்தக அமைப்புடன் தன்னை இணைத்துக்கொண்டு பயணிக்க ஆரம்பித்தது. முதலில் 10 ஆண்டுகளுக்கு இணைந்து செல்வதாக சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன் பின்னர் உலக வர்த்தக அமைப்பு கடுமையான நிபந்தனைகளை சீனா மீது பிரயோகித்தபோதும் மாவோ சேதுங் ‘‘சீனாவை உலகத்துடன் இணைத்தே தீருவேன்’’ என்ற தனது இலக்கில் உறுதியாக இருந்தமையால் அவற்றை சுமுகமாகக் கையாண்டார். அத்துடன் நிக்ஸனின் சீன விஜயத்தின் மூலம் ஏற்பட்ட சீன - அமெரிக்க உறவால் சீனாவுக்கான சந்தை வாய்ப்பு வசதியை அமெரிக்கா முழுமையாக வழங்கியது. எனவே சீனாவின் ஆட்சியாளர்களின்

முயற்சியால் சீனா சர்வதேச வர்த்தகத்தில் இணைந்து செயற்பட்டமை அதன் வெற்றிக்கு காரணமாக அமைந்தது என்பது புலனாகிறது.

இதுமட்டுமன்றி 1978ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை சீனா தனது கடற்கரைப் பகுதிகளை வெளிநாடுகளின் நேரடி முதலீடுகளுக்காக திறந்து விட்டமையினால், 85சதவீதமான முதலீடுகள் கிடைக்கப்பெற்றதுடன் இது சீனாவிற்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது. அதேநேரம் இக்காலப்பகுதியில் இரட்டை நாணயப் பரிமாற்றம் என்ற கொள்கையை பின்பற்றிய நிலையிலும் மாற்றம் ஏற்பட்டு வர்த்தகம் மற்றும் உள்நாட்டு நிதி ஆகியவற்றுக்காக நிலையான ஒற்றை நாணயக் கொள்கையையே பின்பற்றுவதென்றும் சீனா தீர்மானித்தது. அமெரிக்காவுக்கு மட்டும் தனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்துகொண்டிருந்த சீனா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட 10 நாடுகளுக்கு தனது ஏற்றுமதியை உடனடியாக விரிவுபடுத்தியது. இதனைத்தொடர்ந்து உலக வர்த்தக அமைப்பில் 2001ஆம் ஆண்டிலிருந்து சீனா இடம்பெற்றுள்ளது. இதற்கமைய 2011ஆம் ஆண்டிலிருந்து சீனா சராசரியாக 10 சதவீத அளவுக்கு வரியைக் குறைத்து விட்டது.

இத்தகைய செயற்பாடுகளால் அமெரிக்காவில் இயங்கி வந்த பல்தேசிய வர்த்தக நிறுவனங்களின் பார்வை சீனாவை நோக்கித் திசை திரும்பியதோடு மட்டும் நின்றுவிடாது அந்த நாட்டை நோக்கி நகரவும் ஆரம்பித்தன. உதாரணமாக வோல்மார்ட், ஹேன்ஸ் போன்ற பாரிய வர்த்தக நிறுவனங்கள் சீனாவுக்குள் தம்மை விரிவுபடுத்தின. இதன் காரணத்தால் அடிடாஸ் போன்ற நிறுவனங்கள் விலைக்குறைப்பினை செய்ய வேண்டாம் என்று வோல்மார்ட் இடம் கோரியபோதும் அது வெற்றிபெறவில்லை. மாறாக உங்கள் நிறுவனங்களை சீனாவுக்கு மாற்றுங்கள் என்று வோல்மார்ட் போன்ற நிறுவனங்கள் விடுத்த பணிப்புரையே நடைமுறைச்சாத்தியமானது. இதனால் அமெரிக்காவில் இயங்கிவந்த அடிடாஸ் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சீனாவை நோக்கி நகரத்தொடங்கின. இவ்வாறு சீனா கடைபிடித்த நாணயக்கொள்கை மூலம் தனக்கு வாய்ப்பளித்த அமெரிக்காவின் வர்த்தக நிறுவனங்களையும் தன்பால் இழுத்துக்கொண்டது. இதனைத்தொடர்ந்து அடுத்த

காலப்பகுதியில் சீனா இன்னும் பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை கைச்சாத்திடும் கொள்கையை பின்பற்ற ஆரம்பித்தது. அதன் முதல் கட்டமாக 2000ஆம் ஆண்டு ஆசியான் அமைப்புடன் ஒப்பந்தத்தை சீனா செய்துகொண்டது. அதன் பின்னர் தற்போது வரையில் சீனா நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்துள்ளதோடு பல நாடுகளுடன் அவ்வொப்பந்தத்தை மேற்கொண்டு வருகின்றது.

## உலகமயமாக்கல்

அடுத்து சீனாவின் துரித வளர்ச்சிக்கு உலகமயமாக்கலை ஒரு சாதகமான காரணியாக கூறலாம். கடந்த சில தசாப்தங்களாக சீனா உலகமயமாதல் என்பதை மையமாக கொண்டு தனது பொருளாதார வளர்ச்சியைக் கண்டு வந்திருந்தது. இந்த வளர்ச்சி சீனாவை அதீத பொருளாதார முன்னேற்றத்திற்குள் கொண்டு சென்றது. இந்த வளர்ச்சியின் காரணமாக சீனா சர்வதேச பொருளாதாரத்தில் முதன்மைத் தன்மைக்கு வந்தாகிவிட்டது. அரசமானியங்கள் பெற்ற நிறுவனங்களின் வளர்ச்சியின் மூலம் அரசகட்டமைப்புகளும் பாதுகாப்பு துறையும் கணிசமான அளவு தனியார் துறைகளும் பெரும் வளர்ச்சிகண்டன.

ஆனால் சீனாவின் சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து சீன உள்நாட்டு பொருளாதாரம் மிகப் பெருமளவில் இன்னமும் வளர்ச்சி காணாத நிலையிலேயே உள்ளது. இதனால் ஆங்கிலம் என்றால் என்னவென்றே தெரியாத மக்கள் மத்தியில் பொருளாதார வளர்ச்சியை கொண்டுவரும் வகையில் தயாரிப்புகளை உள்நாட்டு சந்தையில் வெளியிடுவதன் மூலம் சீன உள்நாட்டு சந்தையை மேம்படுத்தும் திட்டம் கொண்டுவரப்படுவதாக குறிப்பிடப்படுகிறது. ஆனால் இந்தவகையான திருப்பத்தை மேலைநாடுகளின் ஆய்வாளர்கள் வேறுவகையில் பார்க்கின்றனர். அதாவது சீனாவை சொந்தப் பொருளாதாரத்தில் அதிக அளவில் தங்கியிருக்கவைப்பதன் மூலம் எதிர்வரும் காலங்களில் உள்நாட்டுப் பொருளாதாரத்தை சர்வதேச சந்தைக்கு திறந்துவிடும் நிலை ஏற்படும். அப்போதுகூட வெளிநாடுகளில் உற்பத்திசெய்யப்பட்ட அதிகூடிய விலைப்பொருட்களிலும் உள்நாட்டு சந்தை பொருட்கள் விலைகுறைந்ததாக இருக்கும். அத்துடன் மொழி ரீதியாகவும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்கள்

சிக்கல்களில் இருக்க உள்நாட்டு விற்பனை அதன் அனுகூலங்களை அனுபவிக்க கூடியநிலையை உருவாக்குமொரு செயற்றிட்டமே இதுவாகும் என்றே மேலைத்தேய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏற்கனவே உலகமயமாக்கலால் வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கும் சீனாவிற்கு இது மேலும் அதீத வளர்ச்சியையே அளிப்பதாக அமையப்போகிறது.

## இராஜதந்திர செயற்பாடுகள்

அடுத்ததாக சீனா தனது பொருளாதார பலத்தை மேலும் உயர்த்திக்கொள்ள சில தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. சீனாவைப் பொறுத்தவரையில் அதற்கு போட்டித்தன்மை அதிகமாக உள்ளதால் தனது முதலீட்டுத் தளங்களில் ஸ்திரத்தன்மையையே அதிகமாக விரும்புகின்றது. இதனை மையப்படுத்தி சில விடயங்களை சீனா கவனத்தில் கொண்டுள்ளது. குறிப்பாகக் கூறுவதானால் ஆரம்பத்தில் சீனாவின் மாநிலங்கள் வெளிநாடுகளுக்கு முதலீடுகளை - கடன்களை வழங்க முடியும் என்ற நிலைமைகள் இருந்தன. ஆனால் தற்போது மத்திய அரசாங்கத்தின் ஊடாகவே அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இது சிறந்ததொரு விடயமாகும். காரணம் சீனாவின் மாநிலமொன்று சிறிய நாடொன்றுக்கு கடன்தொகையை வழங்குகின்றது. பின்னர் குறித்த காலப்பகுதிக்குள் அதனை அந்த நாடு மீளச் செலுத்த முடியாது போகின்றபோது அந்த மாநிலம் தான் வழங்கிய கடனை மீளப்பெறுவதற்காக அதியுச்சமாக எடுக்கக் கூடிய நடவடிக்கையை கையிலெடுத்தால் நாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகள் கேள்விக்குறியாகிவிடும். ஆகவே அதனை மையமாகவைத்து இராஜதந்திரக் கொள்கைகளை மாற்றியமைத்துள்ளது. அதாவது தனது நாட்டிலுள்ள வளங்களை மட்டுமல்லாது ஏனைய உலக நாடுகளிலுள்ள வளங்களையும் கைப்பற்றும் நோக்குடனே சில இராஜதந்திரங்களை சீனா கொண்டுள்ளது எனலாம். அதாவது நடுத்தர வருமானம் பெறும் சில நாடுகள் தங்கள் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்துக்கொள்ள சீனாவோடு ஒப்பந்தம் செய்து வருகின்றன. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் சீனா அதிகளவான நிதியினை அந்நாடுகளின் உட்கட்டமைப்பு விருத்தியில் முதலிட்டு வருகின்றது. இவ்வாறு வழங்கப்படும் கடன்

உரிய காலத்தில் திரும்ப செலுத்தப்படாவிடின் அதற்கு பதிலாக கடன்பட்ட நாடுகளின் தனித்துவமான வளங்களை அல்லது அந்த உட்கட்டமைப்புக்களை குத்தகைக்கு தர வேண்டும் எனவும் ஒப்பந்தம் செய்துவருகிறது. இதற்கு உதாரணமாக சீனாவிடமிருந்து வாங்கிய கடனை இலங்கை திருப்பி கொடுக்க தவறிவிட்டதால் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருடங்களுக்கு சீனா குத்தகைக்கு பெற்றுள்ளது. இதேபோன்று ஜிபௌட்டி, பாகிஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகளும் சீனாவின் பிடியில் சிக்கியுள்ளன.

மேலும் இத்தகைய நாடுகள் தமது உட்கட்டமைப்பு மேம்பாட்டையும் எதிர்பார்ப்பதால் சீனாவிற்கு இலகுவாக தனது வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல இயலுமானதாக உள்ளது. இச்செயற்பாடுகள் அனைத்துமே இயல்பாகவே உள்நாட்டு அரசியலில் தலையீடுகளை செய்வதற்கு சீனாவிற்கு இடமளிப்பதாக அமைந்து விடுகின்றன. இதன் காரணமாகவே சீனா தனது பொருளாதார பலத்தைப் பயன்படுத்தி அரசியலில் தலையீடுகளை மேற்கொள்கின்றது. இது சீனாவின் ‘‘பொருளாதார உதவி வழி இராஜதந்திரம்” என அழைக்கப்படுகின்றது. மேலும் இதற்காகவென்றே சீனாவைச் சேர்ந்தவர்கள் பலர் இராஜதந்திரச் சேவை, பூகோள பொருளாதார விடயங்கள் போன்றவற்றில் கற்கைகளை நிறைவு செய்து வருகின்றார்கள். மேற்குலக நாடுகள் சீனாவிடமிருந்து கற்றுக்கொண்டதை விடவும் அந்த நாடுகளிடமிருந்து சீனா கற்றுக்கொண்டதே தற்போதைய நிலையில் அதிகமாகவுள்ளது. இந்த விடயமும் அந்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிமானதொன்றாகின்றது.

மேலே குறிப்பிட்டதன்படி தனது ஆரம்ப காலங்களில் இவ்வாறு பல கொள்கைகளையும், திட்டங்களையும், தந்திரங்களையும், ஒப்பந்தங்களையும் பயன்படுத்தி உலக பொருளாதாரத்தில் தனது பொருளாதாரத்தை அசைக்க முடியாத ஒன்றாக அபிவிருத்தி செய்து கொண்ட சீனாவின் தற்போதைய பொருளாதார நிலையையும் தற்போது முன்னெடுத்துவரும் கொள்ளைகளையும், திட்டங்களையும் அவதானிக்க வேண்டியதும் அவசியமான ஒன்றாகும். அதன்படி நோக்கும்போது 6 ஆண்டுகளுக்கு

முன்னதாக அமெரிக்காவிடம் 4 ரில்லியன் அமெரிக்க டொலர்களே சீனா சார்ந்த கையிருப்பாக இருந்தது. தொடர்ச்சியான காலத்தில் சீனாவின் யுவானின் சமநிலைத்தன்மையும் வெளிநாட்டு முதலீடுகளும் அத்தொகையை தற்போது 333 ரில்லியன் அமெரிக்க டொலர்களாகியுள்ளது. அமெரிக்காவில் சீனாவுக்குள்ள கையிருப்பானது பாரிய நன்மைகளையே அளித்திருக்கின்றது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சீனாவின் அக்கையிருப்புத் தொகையானது அமெரிக்காவின் வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை வெகுவாகக் குறைப்பதாகவே உள்ளது. ஆகவே அமெரிக்காவுக்கு சீனாவை இலகுவில் புறந்தள்ளி விடமுடியாத நிலைமையே உள்ளது. தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் (Joe Biden) எவ்விதமான கருத்துக்களை முன்வைத்தாலும் சீனாவின் கையிருப்புத் தொகைக்கான மாற்று நிதி மூலங்களை உடனடியாக பெற்றுக்கொள்வதென்பது அவரால் இலகுவில் இயலுக்கின்ற காரியமல்ல. அதேபோன்று சீனா சடுதியாக தனது நாணயப்பெறுமதியை குறைக்குமாயிருந்தாலும் அதனால் அமெரிக்காவுக்கே நெருக்கடியான பொருளாதார நிலைமைகள் எழுந்துவிடும். எனவே வல்லரசு நாடுகளில் 2ஆம் இடத்தில் சீனா இருந்தாலும் முதல் வல்லரசு நாடான அமெரிக்காவையே சாய்க்கும் அளவிற்கு பொருளாதார பலத்துடன் இன்று காணப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா ஆரம்பத்தில் கட்டியது. பின்னர் அதன் நிர்வாகப்பணிகள் உள்ளிட்ட அனைத்தையும் தன்னகப்படுத்தியது. இவ்வாறு அம்பாந்தோட்டையை முழுமையாக தன்னகப்படுத்துவதால் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்குள் சீனாவின் தென்கடற்பகுதி ஊடாக பிரவேசிப்பதற்காக வாய்ப்புக் கிடைக்கின்றது. அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலுள்ள கேந்திர நிலையத்தில் தனது இருப்பும் உறுதியாகின்றது. இது கடல்வழி ரீதியான இணைப்பில் ஆபிரிக்கா உள்ளிட்ட ஏனைய கண்டங்களை இணைப்பதற்கும் அதனையடுத்து செங்கடலூடாக மேல் நோக்கிச் செல்வதற்கும் தங்கு தடையின்றி அமைகின்றது என்பதே சீனாவின் நிலைப்பாடாகும். அதேபோன்று அம்பாந்தோட்டையிலிருந்து கீழ்ப்பக்கமாகச் சென்றால் குறுந்தூரத்தில்தான் மலாக்கா நீரிணை

இருக்கின்றது. இந்த நீரிணையானது இந்தியப் பெருங்கடலையும் பசுபிக் பெருங்கடலையும் இணைப்பதாகவுள்ளது. இந்தோனேசியா, மலேசியா, தாய்வான், ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகளின் கடல்வழிப் போக்குவரத்துக்கு முக்கியமான பகுதியாகக் காணப்படுகின்றது. அம்பாந்தோட்டையிலிருந்து நேரடியாகவே மலாக்கா நீரிணையூடாக பிரவேசிக்க முடிவதானது சீனாவுக்கு காணப்படுகின்ற பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சினையை தீர்ப்பதாகவும் உள்ளது. காரணம் இப்பகுதியின் ஊடாக ஆண்டொன்றுக்கு சுமார் 94000 இற்கும் அதிகமான கப்பல்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. முக்கியமாக பெற்றோலியப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு உற்பத்திப் பொருட்களுடன் மலாக்கா நீரிணை ஊடான கப்பல் பயணங்கள் காணப்படுகின்றன. சீனாவும் தனக்கான பெற்றோலியப் பொருட்களை அதிகளவில் இப்பாதையினூடாகவே பெற்றுக்கொள்கின்றது. தற்போது அம்பாந்தோட்டை துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளதானது அந்நாட்டின் கடல்வழி போக்குவரத்து பாதுகாப்புக்கான ஆபத்தை தகர்த்தெறிவதாகவே காணப்படுகின்றது. ஆகவேதான் சீனாவைப் பொறுத்தவரையில் அம்பாந்தோட்டை துறை முகம் என்பது அதன் கடல்வழிப் போக்குவரத்து திட்டத்தின் ஒரு கேந்திர நிலையமாகவே பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே சீன நாட்டின் உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டு ஏற்றுமதி, வெளிநாட்டு முதலீடுகள், சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், அந்நியச் செலாவணி கையிருப்பு என அனைத்துமே இராஜதந்திர ரீதியான மூலோபாயத் திட்டமிடல்களுடனேயே நடைபெறுகின்றன.

## முடிவுரை

சீனா சோசலிச நாடல்ல. அது ஏகாதிபத்திய எதிர்ப்பில் அக்கறையுடைய நாடுமல்ல. அது தீவிரமாக முதலாளித்துவப் பாதையில் போகிறது என்பதிலும் எந்த ஐயமில்லை. அது ஒரு முதலாளித்துவ நாடு என்பதிலும் மாற்றுக் கருத்தில்லை. ஒரு முதலாளித்துவ அரசு காலப்போக்கில் ஏகாதிபத்தியமாக வளரும் வாய்ப்பையும் நாம் மறுப்பதற்கில்லை. இதன்படி பார்க்கும்போது 2030ஆம் ஆண்டளவில் சீனா உலகத்தில் பொருளாதார மேலாதிக்க சக்தியாக உருவெடுக்கும் என்பது நிச்சயமாகின்றது.

## உசாத்துணை

A brief history of China’s economic growth. (2015, June 30). Retrieved from Wolrd Economic Forum: https://www.weforum.org/agenda/2015/07/brief-history-of-china-economic-growth/

Chan, J. (2009, January 5). 1925-27 சீனப் புரட்சியின் துன்பியல். Retrieved from WSWS: Tamil: நூலகம்: https://www.wsws.org/tamil/category/books/china/china6.shtml

China’s Economic Rise: History, Trends, Challenges, and Implications for the United States. (2019, June 25). Retrieved from Every CRSR Report.com: https://www.everycrsreport.com/reports/RL33534.html

Economic history of China (1949–present). (n.d.). Retrieved from Wikipedia.org: https://en.wikipedia.org/wiki/Economic_history_of_China_(1949%E2%80%93present

40 ஆண்டுகளில் உலகின் மிக சக்திவாய்ந்த நாடாக சீனா உருவானது எப்படி? (2018, June 26). Retrieved from BBC News Tamil: https://www.bbc.com/tamil/global-44603105

02

# பொருளாதார வளர்ச்சியும் இலங்கையில் அதனுடைய அண்மைக்காலப் போக்கும் - விமர்சனரீதியான பார்வை

திருமதி. ஸியாளினி ஹேமப்பிரகாஷ்
விரிவுரையாளர் (தகுதிகாண்)
பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலரீதியாக குறித்த ஒரு நாட்டின் மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மெய்மொத்தத் தேசிய உற்பத்தி அல்லது மெய்த்தலா உற்பத்தி என்பவற்றில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பாகும். கோட்பாட்டுரீதியாக வரைவிலக்கணப்படுத்தும் போது பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி இயலளவு அல்லது உத்தம உற்பத்தி விரிவடைதலாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதமே பொருளாதார வளர்ச்சி வீதம் எனப்படுகின்றது.


ஒரு நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார செயலாற்றத்தையும் விளக்குவதற்கு பொருளாதார வளர்ச்சியானது முக்கியமான ஒரு குறிகாட்டியாகக் கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதார செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்குப் பயன்படுகின்ற ஒரு அளவுகோலாக பொருளாதார வளர்ச்சியென்பது காணப்படுகின்றது (அமிர்தலிங்கம், 2013). இதனாலேயே நாடுகள் உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு எத்தனிக்கின்றன. இருப்பினும் பொருளாதார வளர்ச்சியை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு நாட்டின் ஒட்டுமொத்த செயலாற்றத்தையும் மதிப்பிடமுடியாது. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முன்தேவையான விடயமாக பொருளாதார வளர்ச்சியானது பார்க்கப்பட்டாலும் பொருளாதார வளர்ச்சியானது பொருளாதார அபிவிருத்தியாகாது. ஒரு நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு உயர்பொருளாதார வளர்ச்சியுடன், சாதகமான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம், குறைந்த வேலையின்மை வீதம், குறைவான பணவீக்கம்,

வருமானப் பங்கீட்டில் காணப்படும் சமமின்மையை இயன்றளவு குறைத்தல், வறுமைக் குறைப்பு, சமூக நலக் குறிகாட்டிகளில் மேம்பட்ட நிலையை அடைதல் என்பனவும் முக்கியமானதாகும் (அமிர்தலிங்கம், 2013).

பொருளாதார வளர்ச்சியின் போது பொருளாதாரத்தின் மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நீண்டகால அடிப்படையில் அதிகரிப்பானது இடம்பெறும். பொருளாதார வளர்ச்சியை பின்வருமாறு இரு முறைகளில் வரைபடரீதியாகக் காட்டலாம்.


1. உற்பத்தி சாத்திய வளையியின் அடிப்படையில் கீழுள்ள வரைபடத்தில் உற்பத்தி சாத்திய வளையியின் வெளிநோக்கிய அல்லது வலப்புறம் நோக்கிய நகர்வின் மூலம் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டினைக் காட்டலாம்.

**வரைபடம் 2.1: உற்பத்தி சாத்திய வளையியின் வெளிநோக்கிய நகர்வு**




2. மொத்தக் கேள்வி மற்றும் மொத்த நிரம்பல் மாதிரியின் அடிப்படையில், கீழுள்ள வரைபடத்தின்படி பொருளாதாரத்தில் நீண்டகால மொத்தக் நிரம்பல் கோடு $AS_1$ இலிருந்து $AS_2$ வரை வலப்புறம் நகர்வதன் மூலம் பொருளாதாரத்தின் உத்தம உற்பத்தி மட்டத்தின் அதிகரிப்பினைக் காட்ட முடியும். உத்தம உற்பத்தி மட்டத்தின் அதிகரிப்பு மூலம் காட்டப்படுவது பொருளாதார வளர்ச்சியாகும்.

**வரைபடம் 2.2: நீண்டகால மொத்தக் நிரம்பல் கோடு**




உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கும் (Actual Growth) சாத்தியமான பொருளாதார வளர்ச்சிக்கும் (Potential Growth) இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. அந்தவகையில் மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பே உண்மையான அல்லது மெய்யான வளர்ச்சி ஆகும். இது குறுங்கால வளர்ச்சியாகக் கருதப்படும். அடுத்து, பொருளாதாரத்தின் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான ஆற்றலில் அதாவது உற்பத்தி இயலளவில் ஏற்படும் நீண்டகால அதிகரிப்பே சாத்தியமான பொருளாதார வளர்ச்சி ஆகும். இது நீண்ட கால வளர்ச்சியாகக் கருதப்படும். இவை தவிர எதிர்கணிய மெய் வளர்ச்சி என்பது குறிப்பிட்ட ஒரு வருட காலப்பகுதியில் நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மொத்த தேசிய உற்பத்தியானது அதற்கு முன்னைய ஆண்டை விட சார்பளவில் குறைவடைவது ஆகும்.

பொதுவாக நாடுகள் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்காக இரண்டு முறைகளைப் பயன்படுத்துகின்றன.

1. தொடர்ந்து பல வருடங்களில் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அல்லது தேறிய உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு.

2. தொடர்ந்து பல வருடங்களில் தலா நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அல்லது மெய்யான தேறிய உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு.

## பொருளாதார வளர்ச்சி வீதம் (Economic Growth Rate)

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவது பொருளாதார வளர்ச்சி வீதத்தினாலாகும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருட மெய்மொத்த உள்நாட்டு உற்பத்தி} - \text{முன்னைய வருட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{முன்னைய வருட மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி}} X\ 100$$

குறிப்பிட்ட வருட மெய் உள்நாட்டு உற்பத்தி ரூபா மில்லியன் 210 எனவும் முன்னைய வருட மெய் உள்நாட்டு உற்பத்தி ரூபா மில்லியன் 200 எனவும் கருதுக. அச்சந்தர்ப்பத்தில், பொருளாதார வளர்ச்சி வீதம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{210 - 200}{200} X\ 100$$

$$= 5\%$$

## தலா உற்பத்தி வளர்ச்சி வீதம் (Per Capita GDP Growth Rate)

குறிப்பிட்ட காலப்பகுதியில் தலா மெய் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் நுற்றுவீதமே தலா உற்பத்தி வளர்ச்சி வீதமாகும். பொருளாதார வளர்ச்சியை சனத்தொகைக்கு சார்பாக ஒப்பிடுவதற்கு தலா உற்பத்தி வளர்சி வீதம் அளவிடப்படுகின்றது. மக்களின் வாழ்க்கைத்தர மாற்றங்களை இதன் மூலம் அளவிட முடியும். நாட்டின் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே தலா பொருளாதார வளர்ச்சி ஆகும்.

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியின் குறிகாட்டிகளாக (Economic Growth Indicators),

1. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம்
2. மெய் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம்

3. மெய் தலா உற்பத்தி வளர்ச்சி வீதம்
4. பொருளாதார கட்டமைப்பு மாற்றம்

என்பன பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வீதத்தை கணிப்பிட மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதமே (Real GDP Growth Rate) அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **வளத் திரட்சி**
    1. பௌதீக மூலதனம்
    2. மனித மூலதனம்
    3. இயற்கை மூலதனம்
    4. சமூக மூலதனம்
2. **விளைதிறன் / உற்பத்தித்திறன்**
    1. தொழில்நுட்பம்
    2. மனித மூலதனம்
    3. ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான முதலீடு
    4. தொழிற்பிரிப்பு மற்றும் சிறப்புத்தேர்ச்சி
    5. முயற்சியாண்மை திறன் விருத்தி
3. **பொருளாதார உறுதிப்பாடு**
4. **அரசியல் உறுதிப்பாடு**
5. **நல்லாட்சி**
6. **ஊக்குவிப்பு**

நாடுகளின் பேரினப் பொருளாதார இலக்குகளுள் ஒன்றாக உயர்ந்தமட்ட பொருளாதார வளர்ச்சியை எய்துதல் என்பது காணப்படுகின்றது. அந்தவகையில் பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.
2. வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.
3. வறுமை குறைவடையும்.

4. வெற்றிகரமான அரச நிதி முகாமைத்துவத்தைப் பேணக்கூடியதாக இருத்தல்.
    1. அரச கடன் பெறுதலை குறைக்கலாம்.
    2. பொதுச் சேவைகளை வினைத்திறனாக வழங்கலாம்.
5. முதலீடுகள் வலுவடைதல்.
6. வர்த்தக நம்பிக்கை அதிகரிப்பதனால் முயற்சியாளர்களது இலாபம் அதிகரித்தல்.
7. உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைதல்.

ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியால் அனுகூலங்கள் ஏற்பட்டாலும் அது நீண்டகாலத்தில் நிலைபேறான அபிவிருத்திக்கு இட்டுச்செல்லுமா? என்பது கேள்விக்குறியே. ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியால் ஏற்படக்கூடிய பிரதிகூலமான விளைவுகளை பொருளாதார வளர்ச்சியின் செலவுகள் என்போம். அவ்வாறான பொருளாதார வளர்ச்சியோடு தொடர்புடைய செலவுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. சூழல் பிரச்சினைகள் ஏற்படுதல்.
    1. சூழல் மாசடைதல்.
    2. சுற்றுச்சூழல் தரமிழத்தல்.
    3. இயற்கை வளங்கள் தேய்வடைதல்.
    4. மீளுருவாக்கம் செய்யப்படமுடியாத வளங்கள் அழிவடைதல்.
2. உற்பத்தியிலும் நுகர்விலும் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் ஏற்படல்.
3. பொருளாதாரத்தில் பணவீக்க விளைவுகள் ஏற்படல்.
4. வருமான ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்.
5. பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்.
6. பொது மக்களின் நலன்களுக்குரிய மேம்படுத்தும் துறைகளினுள் உரிய முதலீடுகள் ஏற்படாவிடின் வாழ்க்கைத் தரத்தில் பாதிப்புக்கள் ஏற்படல்.
7. நிகழ்கால நுகர்வு குறைவடைதல்.

ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியை அடையும்போது அதனால் பொருளாதாரத்திலுள்ள குறிப்பிட்ட சாரார் அல்லது குறிப்பிட்ட ஒரு பிரதேசம் அதிகம் நன்மைபெறுவது என்பது உண்மையான

வளர்ச்சியாகாது. பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் பரவும் வண்ணம் உயர்வான பேண்தகு வளர்ச்சியை அடைவதே யாவும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி அல்லது பரந்தளவான பொருளாதார வளர்ச்சி ஆகும். யாவும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பதில் மீள் வருமான பங்கீடு இடம்பெறுவது மாத்திரம் உள்ளடக்கப்படுவதில்லை. மாறாக நபர்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்யக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிப்பதும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்க அவசியமான பொருத்தமானதொரு வியாபாரச் சூழலை உருவாக்குவதும் தனிநபர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் மற்றும் வறுமையை குறைப்பதும் உள்ளடக்கப்படும். இத்தகைய வளர்ச்சியை அடைவதற்கு போதியளவு பொருளாதார சமூக மற்றும் நிதிசார் உட்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகும்.

மேலும் உயர்ந்த மட்ட பொருளாதார வளர்ச்சியை எய்துவதும் சமூக நீதியை ஏற்படுத்துவதும் ஒருமித்து அடையப்படவேண்டிய பேரினப்பொருளாதார இலக்குகளாகக் கருதப்பட்டாலும் உண்மையில் நாடுகள் உயர்ந்த மட்ட பொருளாதார வளர்ச்சியை அடையமுயற்சிக்கும்போது சமூகநீதியை ஏற்படுத்தத் தவறிவிடுகின்றன. பொருளாதார வளர்ச்சியென்பது வருமானப் பங்கீட்டில் சமமின்மையைக் குறைத்து பிரதேசரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து சமூகநீதியை ஏற்படத்தக்கூடியவகையில் காணப்படவேண்டும். அத்தகைய நீதிசார் பொருளாதார வளர்ச்சியானது பிரதானமாக மூன்று பண்புகளைக் கொண்டது.

1. வருமானப் பங்கீட்டிலான சமத்துவம் இன்மையை குறைக்கும் வகையிலான பொருளாதார வளர்ச்சி இடம்பெறல்.
2. வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தும் வகையில் பொருளாதார வளர்ச்சி இடம்பெறல்.
3. வறுமையை அகற்ற கூடிய வகையிலான பொருளாதார வளர்ச்சி இடம்பெறல்.

இவ்வகையில் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளான வேலையின்மையை குறைத்தல் வறுமையை குறைத்தல் மற்றும்

வருமான ஏற்றத்தாழ்வு நிலைமையினைக் குறைப்பதனை நீதி சார் பொருளாதார வளர்ச்சி குறிக்கின்றது.

இப்பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் வெற்றிகண்ட நாடுகளின் பொதுவான பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. உயர்வான சேமிப்பு மற்றும் முதலீடுகளை பேணுதல்.
2. பேரினப்பொருளாதார உறுதியைப் பேணுதல்.
3. உலக பொருளாதாரத்தில் பூரண நன்மைகளை பெற்றுக்கொள்ளுதல்.
4. வளப்பங்கீடு, சந்தை சக்திகள் மூலம் நடைபெறல்.
5. நம்பிக்கை வினைத்திறன் மற்றும் அர்பணிப்புடன் ஈடுபடுகின்ற அரசு காணப்படல்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் அபிவிருத்தியடைந்த நாடுகளைக் காட்டிலும் பின்னிற்பதைக் காணலாம். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சார்பளவில் குறைந்த தலைக்குரிய மெய் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இட்டுச்செல்லும் பொருளியல் காரணிகளாக, குறைந்த உற்பத்தி திறன், குறைந்தளவான சேமிப்பு மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களும் நிதி வசதிகளும், இயற்கை வளங்களின் மிகை பயன்பாடு, ஒப்பீட்டளவில் குறைந்த தொழில்நுட்ட வசதி, துரித சனத்தொகை வளர்ச்சி, அதிக வறுமை, மற்றும் குறைந்தளவான பௌதீக மனித மூலதனம் என்பன காணப்படுகின்றன.

எனவே குறிப்பாக குறைவிருத்தி நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு, உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல், மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்தல், வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையில் முதலீட்டை அதிகரித்தல், பேரினப் பொருளாதார உறுதிப்பாட்டை பேணல், அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தல், அரச தனியார் கூட்டு முயற்சிகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்களை அரசு கைக்கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.


## இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வீதம் (சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்திலிருந்து தற்போது வரை)

**அட்டவணை 2.1: இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் (1950 - 2022)**

| Year | Real GDP growth rate | Year | Real GDP growth rate | Year | Real GDP growth rate | Year | Real GDP growth rate | Year | Real GDP growth rate |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1951 | 6.2 | 1967 | 5.1 | 1983 | 5.0 | 1999 | 4.3 | 2015 | 4.2 |
| 1952 | 4.6 | 1968 | 8.2 | 1984 | 5.1 | 2000 | 6.0 | 2016 | 5.1 |
| 1953 | 1.9 | 1969 | 4.8 | 1985 | 5.0 | 2001 | -1.5 | 2017 | 6.5 |
| 1954 | 2.7 | 1970 | 4.3 | 1986 | 4.3 | 2002 | 4.0 | 2018 | 2.3 |
| 1955 | 5.9 | 1971 | 0.2 | 1987 | 1.5 | 2003 | 5.9 | 2019 | -0.2 |
| 1956 | 0.7 | 1972 | 3.2 | 1988 | 2.7 | 2004 | 5.4 | 2020 | -4.6 |
| 1957 | 1.5 | 1973 | 3.7 | 1989 | 2.3 | 2005 | 6.2 | 2021 | 3.5 |
| 1958 | 2.9 | 1974 | 3.2 | 1990 | 6.2 | 2006 | 7.7 | 2022 | -7.8 |
| 1959 | 1.4 | 1975 | 2.8 | 1991 | 4.6 | 2007 | 6.8 | | |
| 1960 | 6.8 | 1976 | 3.0 | 1992 | 4.3 | 2008 | 6.0 | | |
| 1961 | 2.1 | 1977 | 4.2 | 1993 | 6.9 | 2009 | 3.5 | | |
| 1962 | 4.6 | 1978 | 8.2 | 1994 | 5.6 | 2010 | 8.0 | | |
| 1963 | 2.8 | 1979 | 6.3 | 1995 | 5.5 | 2011 | 8.4 | | |
| 1964 | 6.4 | 1980 | 5.8 | 1996 | 3.8 | 2012 | 9.1 | | |
| 1965 | 2.3 | 1981 | 5.8 | 1997 | 6.3 | 2013 | 3.4 | | |
| 1966 | 3.8 | 1982 | 5.1 | 1998 | 4.7 | 2014 | 5 | | |


**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை சிறப்பு புள்ளிவிபரத் தொகுப்பு (2022)

**வரைபடம் 2.3: இலங்கையின் பொருளாதார வளர்ச்சிவீதப் போக்கு (1950-2023)**




**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை சிறப்பு புள்ளிவிபரத் தொகுப்பு (2022)

**வரைபடம் 2.4: இலங்கையின் சராசரிப் பொருளாதார வளர்ச்சி வீதம்**




**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை சிறப்பு புள்ளிவிபரத் தொகுப்பு (2022)

இலங்கை சுதந்திரம்பெற்ற 1948ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரைக்கும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் மீது இலங்கையில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களினுடைய அரசியற் கொள்கைகள் மற்றும் அவர்களால் காலத்திற்குக் காலம்

அமுல்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் தாக்கஞ்செலுத்தின. குறிப்பாக 1948-2022ஆம் ஆண்டுகளுக்கிடையில் இலங்கையில் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் அமுல்ப்படுத்தப்பட்டன. அதாவது 1948-1955 காலப்பகுதியில் திறந்த வர்த்தகக் கொள்கையும் (Open Trade Policy), 1956-1965 காலப்பகுதியில் கட்டுப்பாடுடைய மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையும் (Dirigiste Economic Policy), 1966-1970 காலப்பகுதியில் பகுதியளவு திறந்த பொருளாதாரக் கொள்கையும் (Partially Liberalized Economy) அமுலில் இருந்தன. ஆனால் 1971-1977 காலப்பகுதியில் மீண்டும் கட்டுப்பாடுடைய மூடப்பட்ட இறக்குமதி பதிலீட்டுப் பொருளாதாரக்கொள்கை (2nd Wave of Import Substitution Closed Economic Policy) அமுல்படுத்தப்பட்டதோடு 1977 இலிருந்து தற்போது வரைக்கும் ஏற்றுமதி வர்த்தகத்தை நோக்கமாகக்கொண்ட ஒரு விரிவான திறந்த பொருளாதாரக்கொள்கை (Export Oriented Liberalized Economic Policy) அமுல்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை ஒட்டுமொத்தமாக நோக்கின் 1948–2022 வரையான ஆண்டுக்கு இடைப்பட்ட 75 வருட காலப்பகுதியில் இலங்கையின் சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம் 4.2 வீதம் மாத்திரமேயாகும். பொருளியலில் 4.2 வீதச் சராசரிப் பொருளாதார வளர்ச்சியை உயரிய வளர்ச்சியாகக் கருதமுடியாது. இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விடயம் யாதெனில் இலங்கை எப்போதெல்லாம் மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததோ அப்போதெல்லாம் நாடு குறைந்த பொருளாதார வளர்ச்சியையே அனுபவித்துள்ளது. மாறாக நாடு பகுதியளவு திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியபோதும் முழுமையான திறந்தபொருளாதாரக் கொள்கையை அமுல்படுத்திய போதும் சார்பளவில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. இதனை அட்டவணை 2.2 தெளிவாகக் காட்டுகின்றது. இதிலிருந்து இலங்கையில் பொருளாதாரக்

கொள்கை மாற்றங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மீது பாரிய செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை உணரமுடிகின்றது.

**அட்டவணை 2.2: வெவ்வேறு பொருளாதாரக் கொள்கை காலத்தில் சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம்**

| பொருளாதாரக் கொள்கை | ஆண்டு | சராசரிப் பொருளாதார வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| திறந்த வர்த்தகக் கொள்கை (Open Trade Policy) | 1948-1955 | 4.3 |
| கட்டுப்பாடுடைய மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை (Dirigiste Closed Economic Policy) | 1956-1965 | 3.2 |
| பகுதியளவு திறந்த பொருளாதாரக் கொள்கை (Partly Liberalized Economic Policy) | 1966-1970 | 5.2 |
| மூடப்பட்ட இறக்குமதி பதிலீட்டுப் பொருளாதாரக் கொள்கை (Import Substitute Closed Economic Policy) | 1971-1977 | 2.9 |
| விரிவான திறந்த பொருளாதாரக் கொள்கை (Liberalized Economic Policy) | 1978- to date | 4.5 |
| • First wave of Liberalized Economic Policy | 1978 to 1987 | 5.2 |
| • Second wave of Liberalized export led Economic policy | 1988 to 2000 | 4.9 |
| • Closing up before the end of the war in 2009 | 2002 to 2009 | 4.9 |
| • Post-war Infrastructure scale up and ongoing reforms | 2010 to date | 3.3 |

**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை (2022)


## இலங்கையின் 1956-1965 மற்றும் 1971-1977 வரையிலான மூடப்பட்ட பொருளாதார காலப்பகுதிகளில் எதிர்கொண்ட குறைவான பொருளாதார வளர்ச்சிக்கான காரணங்கள்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தற்போது வரைக்கும் அனைத்து ஆண்டுகளினதும் பொருளாதார வளர்ச்சி பற்றி ஆராய்வது சாத்தியமற்றதெனினும் நாடு மிகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியினை அனுபவித்ததற்கான காரணங்களை ஆராயவேண்டியது அவசியமானதாகும். 1971ஆம் ஆண்டில் 0.2 வீத பொருளாதார வளர்ச்சியானது இலங்கையில் பதிவுசெய்யப்பட்டது. இவ்வாண்டில் ஜனதா விமுக்தி பெரமுனவின் (JVP) வன்முறை கலந்த கிளர்ச்சியின் காரணமாக நாட்டின் தென்பகுதியில் அரசியல் குழப்பநிலைமை காணப்பட்டமையினால் பொருளாதாரம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. இவைதவிர 1973இல் ஏற்பட்ட முதலாவது பெற்றோலிய அதிர்ச்சியும் அதனால் உருவான இறக்குமதி இயலளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் முதலீட்டில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்தின. இதன்விளைவாக 1973ஆம் ஆண்டிலும் நாடு 3.7 வீத பொருளாதார வளர்ச்சியையே அடையமுடிந்தது. மேலும் 1973-1974 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய மிக மோசமான வரட்சி நிலமை காரணமாக விவசாயத்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டமையினால் பொருளாதார வளர்ச்சியும் அடுத்தடுத்த ஆண்டுகளில் வீழ்ச்சியடைந்தது.

உள்நாட்டு வெளிநாட்டு அதிர்ச்சிகளுக்கு அப்பால் 1951 - 1977 காலப்பகுதியில் குறிப்பாக மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்பட்ட காலப்பகுதிகளில் அடையப்பட்ட மந்தமான பொருளாதார வளர்ச்சிக்கு பலகாரணிகள் காரணமாக விளங்குகின்றன. பொருளாதார நடவடிக்கைகளின் மீது அமுல்படுத்தப்பட்ட விரிவான கட்டுப்பாடுகள், இறக்குமதி பதிலீட்டுக்கொள்கை மீது காணப்பட்ட சார்புத்தன்மை, வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் போதாமல் இருந்தமை, ஏற்றுமதிகளுக்கு காணப்பட்ட கட்டுப்பாட்டால் அந்நியச்செலாவணி உள்வருகை போதாமல் இருந்தமையும் உள்நாட்டு இறக்குமதி பதிலீட்டு உற்பத்திகளுக்கான இறக்குமதி உள்ளீடுகளை நுகர்வதற்கு தேவையான வெளிநாட்டுச் செலாவணிக்கு தட்டுப்பாடு

நிலவியமையும் மற்றும் தனியார் தொழில் முயற்சிகளுக்கு எதிராக அரசாங்கக் கொள்கைகள் என்பவை அவற்றுள் முக்கியமான சில காரணிகளாகும்.

**வரைபடம் 2.5: இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 1951-1977 வரை**




**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை சிறப்பு புள்ளிவிபரத் தொகுப்பு (2022)

## திறந்த பொருளாதாரக்கொள்கை அமுல்படுத்தப்பட்ட பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாராளுமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் திறந்த பொருளாதாரக்கொள்கை அமுல்படுத்தப்பட்டதன் பின்பு பொருளாதார வளர்ச்சி வீதம் மிக வேகமாக அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சி வீதம் 1978இல் 8.2 வீதமாக அதிகரித்ததுடன் தாராளமயமாக்கலுக்குப் பின்வந்த அடுத்த ஆறு ஆண்டு காலப்பகுதியில் (1978-1983) சராசரியாக 6 வீதமாகவும் காணப்பட்டது. 1977இல் காணப்பட்ட சிறந்த காலநிலை, தாராளமயமாக்கத்தின் காரணமாக நாட்டின் பெருந்தோட்ட ஏற்றுமதிகளுக்குக் கிடைத்த வெளிநாட்டுச் சந்தைவாய்ப்புக்கள் மற்றும் அரச முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பு (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 27.4 வீதம்) என்பனவே இக்காலப்பகுதியில்

அடையப்பட்ட சாதகமான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்த காரணிகளாகும்.

எனினும் அரசாங்கம் பின்வந்த காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை நிலைத்திருக்கக்கூடிய விதத்தில் பேணுவதற்குத் தேவையான பேரினப் பொருளாதாரக்கொள்கைகளை அமுல்படுத்தவில்லை. ஏனெனில் உள்நாட்டு நுகர்வோர் கேள்வி மற்றும் அரசசெலவு என்பவற்றை முகாமைசெய்வதற்குத் தேவையான பொருத்தமான கொள்கைகள் காணப்படாமையினால் பணவீக்கம் மிகவேகமாக அதிகரித்துக்கொண்டிருந்தது. அத்துடன் வட்டிவீதம் அதிகரித்தமையினால் தனியார் முதலீடுகள் வீழ்ச்சியடைந்ததோடு நாணயமாற்றுவீதத்தின் பெறுமதி உயர்வடையத் தொடங்கியமையால் வர்த்தகமாற்றுவீதமும் மோசமடைந்தது.

இவைதவிர, 1980களின் முற்பகுதியில் ஆரம்பித்த வடகிழக்கு யுத்தமும் 1980களின் பிற்பகுதியில் நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டுக்குழப்ப நிலைமைகளும் முதலீட்டுக்குத்தேவையான அமைதியான சூழ்நிலையை மோசமடையச்செய்தன. இனப்பிரச்சினை வலுப்பெற்று 1983ஆம் ஆண்டு ஆரம்பித்த உள்நாட்டு யுத்தத்தால், திறந்த பொருளாதாரக்கொள்கை மூலம் இலங்கை எதிர்பார்த்த வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி இலக்குகளை அடையமுடியாமல் போனது. நாட்டின் வடகிழக்குப் பிரதேசங்களில் தனிநாட்டினை அமைப்பதற்கான ஆயுதப் போராட்டமானது காலப்போக்கில் தீவிரமடைந்ததுடன் இதனால் இப்பிரதேசங்களின் பொருளாதார நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு பாதிப்பிற்குள்ளாயின. 1987ஆம் ஆண்டு வடகிழக்குப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கையின் ஒருபகுதியாக இந்திய அமைதி காப்புப் படையினர் இலங்கைக்கு வந்தனர். இந்த நிகழ்வானது JVP ஒரு வன்முறை கலந்த போராட்டத்தினை முன்னெடுப்பதற்கு வழிவகுத்தது. இப்போராட்டமானது 1987 - 1989 காலப்பகுதியில் நாட்டில் முழுமையான சட்ட ஒழுங்கு அமுல்படுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தியது. நாட்டில் நிலவிய இவ் அசாதாரண சூழ்நிலைகளின்

காரணமாக இக்காலப்பகுதியில் சராசரி பொருளாதார வளர்ச்சி வீதமானது 3.7 வீதமாக வீழ்ச்சியடைந்தது.

மார்க்கா (1998) நிறுவனத்தினர் நடாத்திய ஆய்வின் மூலம் இலங்கையில் யுத்தம் நடந்திருக்காவிட்டால் 1983-1996 இடைப்பட்ட காலப்பகுதியில் வருடாந்தம் 7 வீத பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கலாம் என அறியமுடிகின்றது. மேலும் சந்திரசேகரம் மற்றும் அமிர்தலிங்கம் (2010) மேற்கொண்ட ஆய்வில் இலங்கையில் முரண்பாடும் யுத்தமும் இடம்பெற்றிருக்காவிட்டால் 1978-2005 வரையான காலப்பகுதியில் இலங்கை சராசரியாக 10.06 வீத வருடாந்த வளர்ச்சியை அடைந்திருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நாடு இக்காலப்பகுதியில் வருடாந்தம் சராசரியாக 4.8 வீத வளர்ச்சியினையே உண்மையில் அடைந்துகொண்டது.

1989ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கமானது பொருளாதார தாராளமயமாக்கத்தின் இரண்டாவது கட்டத்தினை அமுல்படுத்தியது. இவ் இரண்டாவது கட்டமானது சர்வதேச நாயண நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட SDR 156 மில்லியன் நிதியுடன் மூன்று வருட அமைப்புச் சீராக்கல் வசதி (Structural Adjustment Facility) திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. இக்காலப்பகதியில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதான முயற்சிகளைச் செய்துகொண்டது. தயாரிப்புத்துறை, வர்த்தகம் மற்றும் உல்லாச பயணத்துறை என்பவற்றின் சிறந்த செயலாற்றம் காரணமாகவும் நாட்டில் நிலவிய சமாதான சூழ்நிலையின் காரணமாகவும் பொருளாதார வளர்ச்சி வீதமானது 1990-1994 காலப்பகுதியில் சராசரியாக 5.5 வீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.

1995-2011 காலப்பகுதியானது பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு சிக்கலான ஏற்ற இறக்கங்களைச் சந்தித்த காலப்பகுதியாகக் காணப்படுகின்றது. 2001ஆம் ஆண்டில் நாட்டின் சர்வதேச விமான நிலையமானது பயங்கரவாதத் தாக்குதலுக்கு உள்ளானமையால் பொருளாதார வளர்ச்சி வீதமானது -1.5 எனும் எதிர்க்கணியப் பெறுமானத்தை அடைந்தது. இதுவே சுதந்திரத்திற்குப் பின் நாடு அனுபவித்த முதலாவது

எதிர்க்கணியப் பொருளாதார வளர்ச்சி வீதமாகும். இப்பயங்கரவாதத் தாக்குதலால் நாட்டின் வர்த்தகம் மற்றும் உல்லாச பயணத்துறை என்பன மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டமையே இவ்எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாகும்.

எனினும் 2002இல் அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவுடன் மீண்டும் பொருளாதாரம் வழமைநிலைமைக்குத் திரும்பியது. ஓரிரு வருடங்களின் பின் நாட்டில் சமாதானம் மறைந்து 2004ஆம் ஆண்டிலிருந்து நாடு மிகவும் தீவிரமான யுத்தத்திற்கு முகங்கொடுத்ததுடன் இறுதியில் மூன்று தசாப்தகாலமாக நிலவிய உள்நாட்டு யுத்தமானது 2009ஆம் ஆண்டு மேமாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. தற்காலிக சமாதானம், யுத்தம் மற்றும் யுத்த முடிவு ஆகிய மூன்றையும் கொண்டிருந்த இக்காலப்பகுதியில் (2002-2011) வருடாந்த பொருளாதார வளர்ச்சியானது சராசரியாக 6.1 வீதமாகக் காணப்படுகின்றது.

## யுத்தத்திற்கு பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009ஆம் ஆண்டில் இலங்கையானது 3.5 வீதப் பொருளாதார வளர்ச்சியையே பதிவுசெய்தது. ஆனால் அதைத்தொடர்ந்து வந்த 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே 8%, 8.4% மற்றும் 9.1% என்ற உயர் பொருளாதார வளர்ச்சியை இலங்கை தொடர்ந்து பதிவுசெய்தது. குறிப்பாக 2012இல் 9.1 வீத பொருளாதார வளர்ச்சியானது சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார வரலாற்றில் அடையப்பட்ட அதியுச்ச பொருளாதார வளர்ச்சியாகும். உல்லாசப் பயண விருத்தி, விவசாயத்துறையில் ஏற்பட்ட மீளெழுச்சி, பாதுகாப்பு அமைச்சுக்கான அதிகரித்த ஒதுக்கீடு, மற்றும் உட்கட்டுமானத்துறையில் ஏற்பட்ட மீளெழுச்சி என்பனவே இவ்வதிகரித்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்த காரணிகளாகும். இலங்கையில் யுத்தம் முடிவுக்குவந்த அடுத்த நான்கு வருடங்களில் (2010 - 2013) இலங்கையின் சராசரிப்

பொருளாதார வளர்ச்சி வீதமானது 7.2 வீதமாகக் காணப்பட்டது. இருப்பினும் யுத்தமுடிவுக்குப் பின்னர் நாடு பதிவுசெய்த சடுதியான உயர் பொருளாதார வளர்ச்சி வீதத்தினை நீண்டகாலத்திற்கு இலங்கையால் பேண முடியாமல் போனது.


குறிப்பாக 2011-2013 காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகமானது 2010இல் ஏற்பட்ட ஐரோப்பிய யூனியனின் GSP+ வரிச்சலுகை நீக்கத்தால் (யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுக்களைக் கண்டித்து இலங்கைக்கு வழங்கிய GSP+ வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொண்டது) ஏற்றுமதி வருமானத்தை இழந்து பாதிக்கப்பட்டதோடு அதேநேரம் இறக்குமதிச்செலவுகளும் பாரியளவால் அதிகரித்தது. இதனால் வர்த்தகப்பற்றாக்குறை 9 பில்லியன் அமெரிக்க டொலர்களால் விரிவடைந்தது. இவ் வர்த்தகப் பற்றாக்குறையின் 60-70 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு வேலைவாய்ப்பினூடாக உழைத்த அந்நியச்செலாவணி வருமானத்தின் மூலம் ஓரளவு ஈடுசெய்தாலும் அவ்வர்த்தகப் பற்றாக்குறையிலிருந்து முழுமையாக மீளெழ முடியவில்லை. இதன் காரணமாக 2013இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 3.5 வீதமாக குறைவடைந்தது. அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளிலும் 5 வீதத்திலும் பார்க்க குறைவான வளர்ச்சி வீதத்தையே பதிவுசெய்தது.

2017ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கமானது, ஐரோப்பிய யூனியனின் GSP+ வரிச்சலுகையை மீளப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து இலங்கையின் ஏற்றுமதி வருமானமானது 15 வீதத்தால் அதிகரித்ததோடு பொருளாதார வளர்ச்சி வீதமானது அக்காலப்பகுதியில் 6.5 வீதமாக உயர்வடைந்தது. அதனைத்தொடர்ந்து 2019ஆம் ஆண்டு இலங்கையின் பலபகுதிகளிலும் ஏற்பட்ட உதித்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதலால் இலங்கையின் சுற்றுலாத்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டதோடு அக்காலப்பகுதியில் இலங்கையானது -0.2 வீத எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை பதிவுசெய்தது. இது சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை பதிவுசெய்த இரண்டாவது எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி வீதமாகும்.

தொடர்ந்து 2020ஆம் ஆண்டு கொவிட் - 19 தொற்றுத் தாக்கத்தால் சர்வதேசரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் விதிக்கப்பட்ட பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் தடைகளால் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் மற்றும் சுற்றுலா வர்த்தகம் என்பன மோசமாகப் பாதிக்கப்பட்டதோடு உள்நாட்டுப் பொருளாதாரமும் பாரிய பாதிப்பிற்கு உள்ளானது. இதனால் இலங்கையின் பொருளாதாரமானது உலக நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு எதிர்க்கணிய வளர்ச்சியைக் காண்பித்தது போன்று 4.6 வீத எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியை 2020இல் இலங்கை பதிவுசெய்தது. 2021இல் கொவிட் - 19 பெருந்தொற்று நாட்டில் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு இலங்கையின் பொருளாதாரமானது புத்துயிர்பெற்று மீண்டெழுந்து 3.5 வீத பொருளாதார வளர்ச்சியினை 2021ஆம் ஆண்டில் பதிவுசெய்தது. இருப்பினும் 2022ஆம் ஆண்டில் இலங்கை வரலாறு காணாத பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்ததன் விளைவாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதமானது -7.8 வீதமாக சுருக்கமடைந்தது. இதுவே இலங்கை சுதந்திரமடைந்த 75 வருடகால வரலாற்றில் எதிர்கொண்ட பாரிய எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சியாகும்.

இப்பாரிய பொருளாதார நெருக்கடியால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்கின்ற விவசாயத்துறை (4.6 வீத வீழ்ச்சி), கைத்தொழில்துறை (16 வீத வீழ்ச்சி) மற்றும் சேவைத்துறை (2 வீத வீழ்ச்சி) என்பன வரலாறு காணாத பாரிய பின்னடைவைச் சந்தித்தன. 2022இல் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியால் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையின் அளவு சடுதியாகக் குறைவடைந்ததால் நுகர்வுப் பொருட்கள், எரிபொருள் மற்றும் மின்சாரம் உட்பட வலு உற்பத்திகளின் வழங்கலுக்கு பல இடையூறுகளையும் மற்றும் பல்வேறு கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளில் பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தி பொருட்களின் விலைகள் உள்நாட்டு சந்தைகளில் கணிசமாக அதிகரித்தன.

**வரைபடம் 2.6**





பொருளாதார அழுத்தங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில், கைத்தொழில், பணிகள் மற்றும் வேளாண்மை ஆகிய மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் 2022ஆம் ஆண்டில் சுருக்கமடைந்தது. தயாரிப்பு, கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவு கைத்தொழில் நடவடிக்கைகள் சுருக்கமடைய வழிவகுத்த வேளையில், குறிப்பாக, வதிவிடச்சொத்துடமை, காப்புறுதி மற்றும் நிதியியல் பணிகள் உள்ளிட்ட உண்மைச்சொத்து நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கங்கள் பணிகளின் நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்தன.

எரிபொருள் வழங்கலில் காணப்பட்ட இடையூறுகளின் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளின் செயலாற்றம் குறைவடைந்தமை, விலங்குத்தீன் பற்றாக்குறையின் காரணமாக விலங்கு உற்பத்திகள் குறைவடைந்தமை, வளமாக்கிப் பற்றாக்குறை மற்றும் ஏனைய வேளாண்மை இரசாயணங்கள் உள்ளிட்ட வேளாண்மை உள்ளீடுகளின் கடுமையான பற்றாக்குறை என்பவற்றால் பாதிக்கப்பட்ட அரிசி மற்றும் காய்கறிகளின் உற்பத்தி, விவசாய உள்ளீடுகளுக்கான அதிகரித்த விலையால் உற்பத்திச்செலவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மழுங்கடித்துவிட்டன. இதன் விளைவாக இலங்கையின்


பொருளாதாரமானது 2022இல் 7.8சதவீத்தினால் சுருக்கமடைந்தது. இது சுதந்திரத்திற்குப் பின்னய பொருளாதாரத்தால் அனுபவிக்கப்பட்ட முன்னொருபோதுமில்லாத மோசமான பொருளாதார நெருக்கடியாகக் காணப்படுகின்றது.

**வரைபடம் 2.7**





மூலம்: மத்தியவங்கி ஆண்டறிக்கை (2022)

**வரைபடம் 2.8: மொத்த உள்நாட்டு உற்பத்தி (நிலையான (2015) விலைகள்)**





மூலம்: மத்தியவங்கி ஆண்டறிக்கை (2022)

**வரைபடம் 2.9: மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம்**




மூலம்: மத்தியவங்கி ஆண்டறிக்கை (2022)

**வரைபடம் 2.10: மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (1977 to 2020)**




**மூலம்:** மத்தியவங்கி ஆண்டறிக்கை சிறப்பு புள்ளிவிபரத் தொகுப்பு (2022)

சுருங்கக்கூறின், சுதந்திர இலங்கை வரலாற்றில் இலங்கையானது 2001, 2019, 2020 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் முறையே -1.5%, -0.2%, -4.6% மற்றும் -7.8% என நான்கு முறை பொருளாதாரச் சுருக்கத்திற்கு உட்பட்டுள்ளது. குறிப்பாக 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சுருக்கமானது சுதந்திர இலங்கை வரலாற்றில், மோசமான பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் இலங்கை எதிர்கொண்ட பாரதூரமான எதிர்க்கணியப் பொருளாதார வளர்ச்சியாகும். இதிலிருந்து நாட்டைமீட்டெடுத்து வளர்ச்சிப் பாதையில் முன்கொண்டு செல்வதற்கு ஆவணசெய்வது காலத்தின் தேவைப்பாடாகும்.

## உசாத்துணை

Amirthalingam, K. (2008). The Sri Lankan Economy, Poobalasingham Publishers, Colombo-11, PP. 55-67

Central Bank of Sri Lanka (various years). Annual Reports of Central Bank of Sri Lanka, Central Bank of Sri Lanka, Colombo.

Jayasooriya, S. P. (2017). Growth empirics: Structural transformation and sectoral interdependencies of Sri Lanka (No. 728). ADBI Working Paper.

Marga. (1998). Cost of War. The National Peace Council of Sri Lanka, Colombo.

Prema-Chandra, A. Edimon, G., Hal, H., and utsav Kumar. (2017), The Sri Lankan economy Charting a new Course, ADB publications. ISBN 978-92-9257-973-9 (Print), 978-92-9257-974-6 (e-ISBN).

Santhirasegaram, S. and Amirthalingam, K. (2010). Direct and Indirect Effects of Conflicts, Violences and War on Economic Growth in Sri Lanka, Sri Lanka Economic Journal of University Economists, 11(1), pp. 31-60.

03

# வங்கித் தொழில்துறை வளர்ச்சியில் நிலைபெறத்தக்க நிதியின் வகிபாகம்

திருமதி. சுஜேந்தினி யசாகன்
விரிவுரையாளர் (தகுதிகாண்)
வர்த்தகத் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## நிலைபெறத்தக்க நிதி

நிலைபெறத்தக்க நிதி என்பது நிறுவனங்களுக்கு, வாடிக்கையாளர்களுக்கு அதேபோன்று பரந்தளவில் சமூகத்திற்கு நீண்ட காலம் நிலைத்திருக்கும் நன்மைகளை நோக்காகக் கொண்டு நிறுவனங்களின் தீர்மானம் எடுத்தல் செயன்முறை மற்றும் வியாபார நடவடிக்கைகள் ஆகியவற்றினுள் சுற்றாடல் சார்ந்த, சமூக மற்றும் ஆளுகைப் பிரமாணத்தை ஒருங்கிணைக்கின்ற நிதியியல் பணிகள் என பரந்தளவில் வரைவிலக்கணம் செய்யலாம். எவ்வாறாயினும், நிலைபெறத்தக்க நிதி என்பதற்கு உருக்கொடுப்பது எது என்பது பற்றி தனியொரு, உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் காணப்படவில்லை. பசுமை நிதி என்பது நிலைபெறத்தக்க நிதியிடலின் கூறொன்றாகும். பசுமை நிதி என்பது பொதுவாக காலநிலை மாற்றம் மற்றும் குறைந்த காபன் பொருளாதாரமொன்றிற்கு மாறுதலடையும் சவால்களை எதிர்கொள்வதை நோக்கி நிதியியல் பாய்ச்சலை வழிப்படுத்துவதைக் குறிப்பிடுகின்றது. பொருளாதார வளர்ச்சியினை அடைகின்ற அதேவேளை, மாசாக்கத்தையும் பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தையும் குறைத்தல், கழிவுகளைக் குறைத்தல் மற்றும் இயற்கை மூலவளங்களைப் பயன்படுத்துவதில் வினைத்திறனை அதிகரித்தல் என்பவற்றிற்கான நிதி என பசுமை நிதிக்கு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு வரைவிலக்கணம் தருகின்றது.

தற்காலத்தில் சனத்தொகை வளர்ச்சி, சுற்றாடல் சீர்குலைதல், காலநிலை மாற்றம், வறுமை மற்றும் சமத்துவமின்மை

என்பவற்றின் விளைவாக நிலைபெறத்தக்க நிதி நடைமுறைகள், வங்கித்தொழில் துறையின் எதிர்காலமாக துரிதமாகத் தோற்றம்பெறுகின்றன. ஐக்கிய நாடுகளும் நிலைபெறத்தக்க அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை, இனங்கண்டு அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு மற்றும் சுபீட்சத்தினை ஊக்குவிக்கின்ற அதேவேளை, புவியினைப் பாதுகாப்பதற்கு அனைத்து நாடுகளினதும் நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை அறிமுகம் செய்துள்ளது.

## இலங்கையின் நிலைபெறத்தக்க நிதிப் பயணம்

இலங்கை மத்திய வங்கியின் நிலைபெறத்தக்க நிதிப் பயணம் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் இலங்கையில் நிலைபெறத்தக்க நிதியினை தொடங்குவதன் முக்கியத்துவம் நிதியியல் துறையின் ஆர்வலர்கள் மத்தியில் பரந்தளவில் ஆராயப்படுகின்றது. 2016இல் இலங்கை மத்திய வங்கி பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்துடன் கூட்டிணைந்து நிலைபெறத்தக்க வங்கித்தொழில் வலையமைப்பிற்கு ஆதரவளித்தது. இது, வளர்ந்து வருகின்ற சந்தைகளிலுள்ள வங்கித்தொழில் சொத்துக்களின் 86 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துக்கின்றது. 2017இல் இலங்கை மத்திய வங்கி, தொடர்புடைய அரசாங்க முகவராண்மைகள், வங்கித்தொழிற் துறை மற்றும் பல வகையான நிதியியல் துறை ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் நிலைபெறத்தக்க நிதியியல் நடைமுறைகளை வசதிப்படுத்தி ஊக்குவிப்பதற்கு இலங்கையில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டலொன்றினை உருவாக்கும் செயன்முறையொன்றினை தொடங்கி வைத்தது. வசதிக்குட்படுத்துகின்ற அத்துடன் பல்துறை ஆர்வலர் செயன்முறையொன்றினூடாக இலங்கையில் நிதியியல் துறைக்கு நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டலை உருவாக்குவதனை வசதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி வழிநடாத்தல் குழுவொன்றினையும் நியமித்தது.

பன்னாட்டு நாணயக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உயிர் பல்லினத்தன்மை நிதி முயற்சியின் நிதியியல் உதவியுடன்

2019 ஜூனில் நிலைபெறத்தக்க நிதிக்கான வழிகாட்டல் தொடங்கிவைக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் அமைப்பு (உத்தரவாதம்), இலங்கை நிதி நிறுவனங்களின் அமைப்பு, இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு உள்ளடங்கலாக ஆர்வலர்களுடனான ஆலோசனையுடன் இவ் வழிகாட்டல் உருவாக்கப்பட்டது.

இவ் வழிகாட்டலானது, நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துனர்களுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் அவர்கள் நிதியளிக்கின்ற கருத்திட்டங்களுடன் இணையப்பெற்ற சுற்றாடல் சார்ந்த, சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளைச் செயற்திறன்மிக்கவாறு முகாமை செய்வதற்கான பரந்தளவிலான நோக்கொன்றினை வழங்குவதுடன் பசுமையான, காலநிலை நட்புமிக்க அத்துடன் சமூக ரீதியாக வசதிக்குட்படுத்துகின்ற தொழில்களுக்கு உதவுவதனை ஊக்குவிக்கின்றது. இது வங்கித் தொழில் மற்றும் நிதி, மூலதனச் சந்தைகள் அத்துடன் காப்புறுதித் தொழிற்துறை உள்ளடங்கலாக நிதியியல் துறையின் பங்களிப்பினை அதிகரிக்க முனைவதுடன் மிகவும் தாக்குப்பிடிக்கத்தக்க அத்துடன் நிலைபெறத்தக்க பசுமைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் அமைப்பு (உத்தரவாதம்) 2015 ஜூலையில் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சியொன்றினைத் தொடங்கியது. அதன் நோக்கம் இலங்கையில் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியினை வசதிப்படுத்தக் கூடிய பொறுப்புமிக்க வங்கித்தொழில் நடத்தைகள் பற்றி முன்னேற்றகரமான புரிந்துகொள்ளலுக்கும் நடவடிக்கைக்கும் தளமொன்றினை வழங்குவதாகும். அதன் நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சி, தொடக்கத்திலிருந்து வெற்றிகரமான வடிவம் பெற்றதுடன் 11 நிலைபெறத்தக்க வங்கித்தொழில் கோட்பாடுகளைக் கொண்ட தொகுதியொன்றினைத் தொடங்கியது.

பங்கேற்கின்ற வங்கிகளின் குழுவொன்றின் மூலம் உருவாக்கப்பட்ட இக் கோட்பாடுகள் மிகவும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சியினை உள்நாட்டில் வசதிப்படுத்துவதற்கு

இலங்கையின் வங்கித்தொழில் துறை தொழிலினை எவ்வாறு நடாத்துவது என்பதனை வரைவிலக்கணம் செய்கின்றது.

## முடிவுரை

ஒவ்வொரு நாடும் அதன் உள்நாட்டு அமைப்பிற்கும் முன்னுரிமைகளுக்கும் பதிலிறுத்தும் விதத்தில் நிலைபெறத்தக்க நிதியினை ஊக்குவிப்பதற்காக தனித்துவம்மிக்க வழிகளை தேர்ந்தெடுத்துள்ளன. வங்காளதேசம், பிரேசில், சீனா, இந்தோனேசியா, மொறோக்கோ, நைஜீரியா, வியட்நாம் போன்ற நாடுகளில் கொள்கை அடிப்படையிலமைந்த முயற்சிகளூடாக ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் தலைமையேற்றுள்ளனர். இதற்கு மாறாக கம்போடியா, ஈக்குவடோர், கென்யா, மெக்சிகோ, மொங்கோலியா, தென்னாபிரிக்கா, துருக்கி போன்ற நாடுகளில் வங்கித்தொழில் அமைப்புகள் தன்னார்வ, தொழிற்துறை முன்னிலையான முயற்சிகளை ஒருங்கிணைத்துள்ளன. இலங்கையில், இலங்கை வங்கியாளர் அமைப்பு நிலைபெறத்தக்க வங்கித்தொழில் முயற்சியினை தொடங்கி இலங்கை மத்திய வங்கி ஆர்வலர்களுடன் கூட்டிணைகின்ற அத்துடன் வழிகாட்டலைத் தொடங்கிவைக்கின்ற இரு அணுகுமுறைகளும் ஒன்றுசேர்ந்துள்ள தனித்துவமிக்க நிலை காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை

Central Bank of Sri Lanka. (2019). Roadmap for Sustainable Finance in Sri Lanka, Retrived from: https://www.cbsl.gov.lk/en/roadmap-for-sustainable-finance-in-sri-lanka-2019

Sri Lanka Banks' Association. (2023). About The Sustainable Banking Initiative, Retrived from: https://sustainablebanking.lk/

04

# நாணயமாற்று வீதம்

செல்வி. திஷோபனா பிரட்மன்
தற்காலிக உதவி விரிவுரையாளர்
முகாமைத்துவத் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

சர்வதேச வர்த்தகம் மற்றும் நிதி தொடர்பான விடயங்களில் முக்கியமான விடயமாக நாணயமாற்று வீதம் காணப்படுகின்றது. சர்வதேச பொருளியலில் இது ஒரு முக்கியமான எண்ணக்கரு ஆகும். ஒரு நாட்டின் நாணயத்தை பிறிதொரு நாட்டு நாணயத்தின் பெறுமதியில் குறிப்பிடுவது நாணய மாற்று வீதம் ஆகும். அதாவது உள்நாட்டு பண அலகொன்றின் பெறுமதியை வெளிநாட்டுப் பணத்தின் மூலம் காட்டுவது நாணயமாற்று வீதம் ஆகும். அல்லது வெளிநாட்டு பண அலகொன்றின் பெறுமதியை உள்நாட்டு பணத்தின் மூலம் காட்டுவதாகும்.

உதாரணம் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி ரூபா 292.00 ஆகும். $1\$ =$ ரூபா 292 அல்லது ஒரு இலங்கை ரூபாவின் ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி ரூபா 1 $= \$\, 1/292$ ஆகும். உலக நாடுகள் தங்கள் கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்கு பெறுமதிக் கணிப்பு அலகாக நாணயமாற்று வீதம் தொழிற்படுகின்றது. நாணயமாற்று வீதம் அந்தந்த நாடுகளின் நாணயத்திற்கு ஏற்படும் கேள்வி நிரம்பலினால் தீர்மானிக்கப்படும்.

## அந்நியச் செலாவணிக்கான கேள்வியும் நிரம்பலும் (Demand and Supply for Foreign Exchange)

ஒருநாட்டின் நாணயத்திற்கான கேள்வியும் அந்நாட்டு நாணயத்திற்கான நிரம்பலும் இணைந்து சமநிலை நாணயமாற்றுப் பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

அமெரிக்க டொலருக்கான கேள்வியை இலங்கையில் தீர்மானிக்கும் காரணிகள்


1. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் இலங்கை இறக்குமதியாளர்கள்.
2. இலங்கைப் பிரஜைகளின் அமெரிக்காவுக்கான பயணம்.
3. இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான குறுங்கால மற்றும் நீண்டகால நிதிப் பாய்ச்சல்கள்.
4. அமெரிக்காவுக்குச் செல்லும் மாற்றல் கொடுப்பனவுகள்.

அமெரிக்க டொலருக்கான நிரம்பலை இலங்கையில் ஏற்படுத்தக்கூடிய காரணிகள்

1. இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள்.
2. அமரிக்காவிலிருந்து இலங்கைக்கான உல்லாசப்பயணிகள் வருகை
3. அமெரிக்கப் பிரஜைகள் இலங்கையிலிருந்து சேவைகளை நுகர்தல்.
4. அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வரும் நீண்டகால மற்றும் குறுங்கால நிதி உட்பாய்ச்சல்கள்.
5. அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வரும் மாற்றல் கொடுப்பனவுகள்.

இவ்வாறு ஒவ்வொரு நாட்டினதும் நாணயத்திற்கான கேள்வி நிரம்பல் குறித்த ஓர் நாட்டில் ஏற்படுவதற்கமைய நாணயமாற்று வீதம் தூய சந்தை அடிப்படையில் பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

**வரைபடம் 5.1: நாணயக் கேள்வி நிரம்பல் சமநிலை**



சமநிலை நாணயமாற்று வீதத்திற்கு கீழாக சந்தையில் மத்திய வங்கி நாணயமாற்று வீதத்தைத் தீர்மானிக்கும் போது அது நாணயமாற்று வீதத்தின் மிகை மதிப்பு ஆகும். சமநிலைக்கு மேலாக நாணயமாற்று வீதத்தை மத்திய வங்கி தீர்மானிக்கும் போது அது குறை மதிப்பு ஆகும்.

அரச தலையீடு அற்ற அந்நியச் செலாவணிச் சந்தையில் அந்நியச் செலாவணிக்கான (டொலர்) கேள்வியானது (நிரம்பல் மாறாத போது) அதிகரிப்பதால் இலங்கை ரூபாவின் பெறுமானம் தேய்வடையும். கேள்வி குறைவடைவதால் டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமானம் ஏற்றமடையும். கேள்வி மாறாத போது நிரம்பல் அதிகரிப்பதால் ரூபாவின் பெறுமானம் உயர்வடையும் (Appreciation). நிரம்பல் குறைவடைவதால் ரூபாவின் பெறுமானம் தேய்வடையும் (Depreciation).

## நாணயமாற்று வீத முறைமைகள் (Exchange Rate Regims)

நாணயமாற்று வீத முறைமைகளை பின்வருமாறு ஐந்து வகையாக வகைப்படுத்தலாம்.

### நிலையான நாணய மாற்று வீதம் (Fixed Exchange Rate)

நாணயமாற்று வீதமானது சந்தை சக்திகளான கேள்வி மற்றும் நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படலாம். அரசாங்கத்தின் மத்திய வங்கியிலுள்ள நாணய அதிகாரிகள் ஓர் குறிப்பிட்ட வீதத்தை நீண்ட காலத்தில் நிலையாக நிர்ணயித்தல் நிலையான நாணயமாற்று வீதம் எனக் குறிப்பிடுகின்றனர். மத்திய வங்கி சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக நாணயப் பெறுமதி இறக்கம் செய்யும் போது நிலையான நாணயமாற்று வீதம் மாற்றியமைக்கப்படும். நிலையான நாணய மாற்றுவீதத்தின் கீழ் நாணயப் பெறுமதி இறக்கம் நடைபெறுகின்றது.

## முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்று வீதம் (Managed Float Exchange Rate)

மத்திய வங்கியின் நாணய அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஓர் குறிப்பிட்ட வீச்சுக்கு அப்பால் நாணயமாற்று வீதம் தேய்வடைவதை கட்டுப்படுத்தி முகாமை செய்யப்படும் முறை இதுவாகும். கட்டுப்பாடுகள் நிலையான நாணயமாற்று வீதத்தை போன்று இறுக்கமானதாக இல்லாமல் ஓரளவு சந்தையில் கேள்வி நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் இந் நாணயமாற்று வீத முறையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட ஓர் வகை நாணயங்களின் கேள்வி, நிரம்பல் போக் ஏற்ப இம்மாற்றுவீதம் மாற்றி அமைக்கப்படுகின்றது. முகாமை செய்து மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீதக் கொள்கை சிறப்பாக செயற்படுவதற்கு அரசாங்கம் போதுமான அளவு ஒதுக்கத்தை பேண வேண்டியது கட்டாயமாகும்.

## சுதந்திரமாக மிதக்கும் நாணயமாற்று வீதம் (Free Floating Exchange Rate)

நாணய அதிகாரிகளின் உத்தியோகபூர்வ தலையீடுகள் இன்றி அந்நியச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுசெலவாணிக்கான கேள்வி நிரம்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் நாணயமாற்று வீதம் மிதக்கும் நாணயமாற்று வீதம் ஆகும். தூய மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீத முறையில் அரசாங்கத்தின் நேரடி அல்லது மறைமுகக் கட்டுப்பாடுகள் எதுவும் இருக்காது. ஆனால் நடைமுறையில் அவ்வாறான தூய சுதந்திரமாக மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீதம் எந்த நாட்டிலும் காணப்படுவதில்லை.

இம்முறையில் நாணயமாற்று வீதமானது, சென்மதி நிலுவைக் கணக்கில் உள்ள ஒவ்வொரு விடயங்கள் ஊடாக வெளிநாட்டுச் செலவாணி ஒன்றுக்கான கேள்வி மற்றும் நிரம்பலை ஏற்படுத்துவதன் ஊடாக குறித்த நாணயத்தின் மாற்று வீதம்

தீர்மானிக்கப்படும். இம்முறைமையின் கீழ் உள்நாட்டு நாணயத்தின் பெறுமானம் வெளிநாட்டு நாணயத்தின் கேள்வி மற்றும் நிரம்பலை அடிப்படையாகக் கொண்டு நாணய பெறுமானத் தேய்வு (Currency Depreciation) இடம் பெறும். நிலையான நாணயமற்று வீதத்தில் நாணயப்பெறுமதி இறக்கம் போன்று இம்முறைமையில் கீழ் நாணயப் பெறுமானத்தேய்வு இடம் பெறுகின்றது.

நிலையான நாணயமாற்று வீதத்தின் கீழ் சென்மதி நிலுவைப் பிரச்சினை வெளிநாட்டுச் சொத்துக்களை பயன்படுத்துவதன் மூலமே தீர்க்கப்படுகின்றது. ஆனால் சுதந்திரமாக மிதக்கும் நாணயமாற்று வீதத்தின் கீழ் அவ்வாறு ஒதுக்கத்தைப் பேண வேண்டிய அவசியம் ஏற்படாது.

நாணயப் பெறுமதித் தேய்வு மூலம் சமூல பற்றாக்குறை நிதியீட்டம் செய்யப்படுகிறது. அதே போன்று சென்மதி நிலுவை மிகை நிலையாக இருக்கும் போது நாணயப்பெறுமதி ஏற்றம் அடையும்.

எனவே சமூல மீதி பற்றாக்குறை நாணயபெறுமதித் தேய்வுக்கும் மிகைநிலை நாணய பெறுமதி ஏற்றத்திற்கும் வழிவகுக்கும். இம்முறையைக் கடைப்பிடிப்பதற்கு அரசாங்கம் வெளிநாட்டு ஒதுக்கத்தைப் பேண வேண்டிய அவசியம் ஏற்படாது.

## சீராக்கக்கூடிய முளையடித்தல் நாணயமாற்று வீதம் (Adjustable Peg Exchange Rate)

மத்திய வங்கி ஒரு மத்திய நாணயமாற்று வீதத்தை நிலையாகக் கொண்டு அவ்வீதத்தில் இருந்து சிறிது மேலாகவும் கீழாகவும் தளம்பல் அடைவதற்கு அனுமதிக்கும் ஓர் மாற்று வீத முறையாகும். மத்திய பெறுமதி தேவையேற்படுமிடத்து மாற்றியமைக்கப்படுகின்றது.

## ஊர்ந்து செல்லுகின்ற முளையடித்தல் நாணயமாற்று வீதம் (Growling Peg Exchange Rate)

முன்னைய காலங்களின் நாணயமாற்று வீதத்திற்கு ஏற்ப மத்திய நாணயமாற்று வீத பெறுமதிச் சீராக்கம் செய்யக்கூடியதாக இருக்கும் போது அதனை ஊர்ந்து செல்லும் நாணயமாற்று வீதம் என அழைப்பர்.

## நாணயப் பெறுமதி இறக்கமும் நாணயப் பெறுமதித் தேய்வும் (Devaluation and Depreciation )

சர்வதேச நிதிசார் விடயங்களில் அடிக்கடி பேசப்படும் இவ்விரு பதங்களும் பொருளாதாரத்தில் ஒரே விளைவைக் கொண்டிருப்பினும் அவை செயற்படும் முறையில் வேறுபாட்டினைக் கொண்டிருக்கின்றன.

நாணயப் பெறுமதி இறக்கம் என்பது நாணய அதிகாரிகளினால் பிறிதொரு நாணய அலகு ஒன்றுக்கு கொடுக்கப்படும் குறித்த நாட்டு நாணயத்தின் அளவை சட்ட ரீதியாக உயர்த்திக் கொள்ளுதல் ஆகும். இது அரச தலையீடு மூலம் நடைபெறுகின்றது. உதாரணமாக ஒரு அமெரிக்க டொலருக்கு வழங்கப்பட்ட ரூபா 369 ஐ ரூபா 380 ஆக அதிகரித்தால், அது நாணயப்பெறுமதி இறக்கம் ஆகும். அதாவது, உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியைக் குறைத்தல் நாணயப் பெறுமதி இறக்கம் ஆகும்.

நாணயப் பெறுமானத் தேய்வு என்பது அந்நியச் செலாவணிச் சந்தையில் கேள்வி நிரம்பல் சக்திகளுக்கு ஏற்ப வெளிநாட்டு நாணய அலகு ஒன்றுக்கு நிரணயிக்கப்படும் உள்நாட்டு நாணயத்தின் அளவு அதிகரிப்பதைக் குறிக்கின்றது. இது சந்தையில் நாணய அதிகாரிகளின் தலையீடு இன்றி சந்தைச் சக்திகளின் செல்வாக்கினால் தன்னிச்சையாக இடம் பெறுகின்றது.

**அட்டவணை 5.1: நாணயப் பெறுமதி இறக்கம் மற்றும் நாணயப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்**

| நாணயப் பெறுமதி இறக்கம் | நாணயப் பெறுமதி தேய்வு |
|---|---|
| நாணய அதிகாரிகளினால் அல்லது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும். | கேள்வி நிரம்பல் சக்திகளினால் மேற்கொள்ளப்படும். |
| நிலையான, முகாமை செய்து மிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீத முறையில் காணப்படும். | மிதக்கும் நாணய மாற்று வீத முறையில் காணப்படும். |
| அரசாங்கத் தலையீடு அதிகமாக பொருளாதாரத்தில் இடம் பெறும். | அரசாங்கத் தலையீடு குறைந்த பொருளாதாரத்தில் இடம் பெறும். |
| வெளிநாடுகளில் ஏற்படும் நிதி நெருக்கடியின் செல்வாக்கிற்கு இலகுவாக உட்படமாட்டாது. | அவ்வாறான நிதி நெருக்கடியால் இலகுவாக மாற்றத்திற்கு உட்படும். |
| அநேகமாக நாணயமாற்று வீதத்தில் மிகைப் பெறுமதியை பேணும் போது இடம் பெறும். | நாணயமாற்று வீதத்தில் சமமதிப்பு இருக்கும் போது இடம் பெறும். |

## முடிவுரை

நாணயமாற்று வீதம் என்பது மற்றொரு நாணயத்தைப் பொறுத்து உள்நாட்டு நாணயத்தின் விலை என வரையறுக்கப்படுகிறது. நாணயமாற்று வீதம் ஒரு நாணயத்தை மற்றொரு நாணயத்துடன் மாற்றும் வீதம் என்றும் கூறலாம் அல்லது மற்றொரு நாணயத்தின் அடிப்படையில் கூறப்படும் ஒரு நாணயத்தின் விலை என்றும் கூறலாம்.

அந்நியச் செலாவணியின் நோக்கம் ஒரு நாணயத்தை மற்றொரு நாணயத்துடன் ஒப்பிட்டு அவற்றின் ஒப்பீட்டு மதிப்புகளைக் காட்டுவதாகும். நாணயத்தின் மாற்று விகிதங்கள் நிலையானதாகவோ அல்லது மிதக்கின்றவையாகவோ இருக்கலாம். நிலையான மாற்று வீதம் நாட்டின் மத்திய வங்கியால் தீர்மானிக்கப்படுகிறது, அதே நேரத்தில் மிதக்கும் வீதம் சந்தை தேவை மற்றும் விநியோகத்தின் இயக்கவியலால் தீர்மானிக்கப்படுகிறது.

பொருளாதாரம், அரசியல் அல்லது உளவியல் ரீதியான சில காரணிகளால் பரிவர்த்தனை விகிதம் பாதிக்கப்படுகிறது. அந்நியச் செலாவணி வீதங்களில் மாறுபாட்டை ஏற்படுத்தும் பொருளாதார காரணிகளாக பணவீக்கம், வர்த்தக நிலுவைகள், அரசாங்கக் கொள்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். அந்நியச் செலாவணி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அரசியல் காரணிகளாக நாட்டில் அரசியல் அமைதியின்மை அல்லது ஸ்திரமின்மை மற்றும் எந்தவொரு அரசியல் மோதலினையும் குறிப்பிட முடியும்.

அந்நியச் செலாவணி வீதத்தினைப் பாதிக்கும் உளவியல் காரணிகள் அந்நிய செலாவணியில் ஈடுபட்டுள்ள பங்கேற்பாளர்களின் உளவியல் ஆகும். அந்நியச் செலாவணி சந்தையில் நடைமுறையில் உள்ள மூன்று வகையான மாற்று வீத அமைப்புகள் உள்ளன. அவை நிலையான மாற்று வீத அமைப்பு, நெகிழ்வான மாற்று வீத அமைப்பு, நிர்வகிக்கப்பட்ட மிதக்கும் மாற்று வீத அமைப்பு என்பனவாகும். அடிப்படையில் நாணயமாற்று வீதம் என்பது பொருளாதார வளரச்சிக்கான உந்துதல்களை வழங்கும் ஒரு காரணியாகவும் தொழிற்படுகின்றது எனலாம்.

## உசாத்துணைகள்

Williamson, J. (1983). The exchange rate system. *Cambridge: MIT press*, 5.

Isard, P. (1995). Exchange rate economics. *Cambridge University Press*.

05

# வர்த்தகப் பாதுகாப்புவாத கண்ணோட்டத்தில் எஃகு மற்றும் அலுமினியம் மீதான அமெரிக்காவின் சுங்கத் தீர்வை விதிப்பு

செல்வி. வசந்தா வினாயகமூர்த்தி
விரிவுரையாளர் (தகுதிகாண்)
பொருளியல் துறை, வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

வர்த்தகப் பாதுகாப்பு என்பது அரசாங்க வர்த்தகக் கொள்கையாகும். இது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலையை அதிகரிக்கிறது, உள்நாட்டு உற்பத்திகளின் விலையைக் குறைக்கிறது மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு சந்தைகளின் மீதான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது (Abboushi, 2010). சுங்கத் தீர்வைகள் (Tariff) அனுமதிப்பங்கு (Quotas) மற்றும் பிற கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் இது சமீபத்தில் வர்த்தக உலகில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செயற்பாடாக மாறியுள்ளது. கடந்த பத்து வருடங்களில் தங்கள் நலன்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புவாத நடவடிக்கைகளை நாடுகள் செயல்படுத்தியதன் விளைவாக வர்த்தகக் கொள்கைகள் மாற்றமடைந்துள்ளன. இதனடிப்படையிலேதான் இறக்குமதி செய்யப்பட்ட எஃகு மற்றும் அலுமினியத்தின் மீதான அமெரிக்க சுங்கத் தீர்வைகள், பாதுகாப்புவாதக் கொள்கைகள் பற்றிய விவாதம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இந்தக் கொள்கைகள் உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாக்கவும், வேலைகளைப் பராமரிக்கவும், தன்னிறைவை ஊக்குவிக்கவும் முயற்சி செய்கின்றன. ஆனால் அவற்றின் தாக்கங்கள் தேசிய எல்லைகளைத் தாண்டி, நிரம்பல் மற்றும் உலகப் பொருளாதாரத்தின் சமநிலையைப் பாதிக்கின்றன.

தேசிய பாதுகாப்பில் இறக்குமதி செய்யப்பட்ட எஃகு தாக்கம் குறித்து அமெரிக்காவில் ஒன்பது மாத விசாரணைக்குப் பிறகு,

பல்வேறு எ∴கு பொருட்களுக்கு 24% சுங்கத் தீர்வை விதிக்க வணிகத் துறை பரிந்துரைத்தது. இதனடிப்படையிலேயே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் 25% சுங்கத் தீர்வையை அறிவித்தார். 2018 மார்ச்சில் இதற்காக கையெழுத்திடப்பட்டது. அமெரிக்காவிற்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற எ∴கு ஆலைகளின் பொருட்களுக்கு தற்போது வரை 25% சுங்கத் தீர்வை நடைமுறையில் உள்ளது. இருப்பினும், அவுஸ்ரேலியா, கனடா மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது ஆர்ஜென்டினா, பிரேசில் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுடன் அனுமதிப்பங்கு (Quotas) திட்டத்தையும் பேணிவருகின்றது. இந்தக் கட்டுரை எ∴கு மற்றும் அலுமினியம் மீதான அமெரிக்க சுங்கத் தீர்வைகளின் நடைமுறை அமுலாக்கம், அதன் விளைவுகள் மற்றும் படிப்பினைகள் ஆகியவற்றை விளக்குகின்றது.

## சுங்கத் தீர்வைகள் (Tariff)

கிமு 300 முதல், தீர்வைகளானது பயன்பாட்டில் உள்ளன. இவை நாடுகளின் பொருளாதாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க முக்கிய காரணியாக உள்ளன (Chris Smith, 2019). சுங்கத் தீர்வை என்பது "வணிக இறக்குமதிக்கான சுங்க வரிகள்" (உலக வர்த்தக அமைப்பு, 2015) என வரையறுக்கலாம்.

தீர்வைகள் விதிப்பதற்கான முக்கிய நியாயங்களை வருமாறு குறிப்பிட முடியும்.

- பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதியைக் குறைத்து விலைகளை உயர்த்துதல்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களினைப் பாதுகாத்தல்.
- கூட்டு நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளுக்கு பதிலடி கொடுத்தல்.

## இறக்குமதித் சுங்கத் தீர்வைகளின் நன்மைகள் மற்றும் தீமைகள்

இறக்குமதி சுங்கத் தீர்வைகள் அரசாங்க வருவாயை அதிகரிக்கின்றன. சர்வதேச வர்த்தகத்தில் நியாயமான போட்டியை

கட்டாயப்படுத்துகின்றன. மேலும் புதிய வர்த்தக ஒப்பந்தங்களை ஊக்குவிக்கின்றன. தீர்வைகள் உண்மையில் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. ஏனெனில் உள்நாட்டுப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பதால் விலை உயர்வு மற்றும் வேலை உருவாக்கம், குறிப்பாக மூலோபாய மற்றும் வளர்ந்து வரும் தொழில்களில் சாதகமான மாற்றங்கள் ஏற்படும்.

மறுபுறம் இறக்குமதி சுங்கத் தீர்வைகள் பொருட்களின் விலைகளை அதிகரிக்கின்றன. நுகர்வு மற்றும் உற்பத்தியில் திறமையின்மையை உருவாக்குகின்றன. கூட்டாளி நாடுகளுக்கு பதிலடி கொடுக்கின்றன. மேலும் தீர்வைகள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை விலையை அதிகரிக்கின்றன. இதனால் நுகர்வோர் அதிக விலை கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. தீர்வைகள் தொழில்துறை செயல்திறனை பாதிக்குமாக இருக்குமானால் இது வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும் (Ahmad Nasrudin, 2022).


## எஃகு மற்றும் அலுமினியம் மீதான ஐக்கிய அமெரிக்காவின் சுங்கத் தீர்வைகள்

எஃகுத் தொழிலில் கவனம் செலுத்துவது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல எனினும், அது உலகளவில் வர்த்தகக் கொள்கைக்கு முக்கியமான படிப்பினைகளை வழங்குகிறது. ஜனாதிபதி டிரம்ப் தனது ஆரம்ப நடவடிக்கைகளில் ஒன்றாக தேசிய பாதுகாப்புக்கு எஃகு தொழில்துறையின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டார். இதன் விளைவாகவே, அவர் எஃகு இறக்குமதியின் மீது 25% சுங்கத் தீர்வையினை விதித்தார். இந்த தீர்வை விதிப்பானது சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் கனடா மற்றும் மெக்ஸிகோ போன்ற அமெரிக்க நட்பு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளையும் பாதித்தது. இருப்பினும், இந்த முடிவு பின்னர் மாற்றப்பட்டது. மே 2019இல், கனடா மற்றும் மெக்ஸிகோ மீதான தீர்வைகள் நீக்கப்பட்டன, ஆனால் எஃகு மீதான 25% மற்றும் அலுமினியத்தின் மீதான 10% வரி இன்னும் உள்ளது.

இந்த முடிவின் பின்னணியில் உள்ள காரணம் தேசிய பாதுகாப்பை வலியுறுத்துவதாகும், இருப்பினும் சிலர் அதன் நியாயத்தை கேள்விக்குள்ளாக்கினர். அமெரிக்க எஃகு

தொழில்துறையானது 80%க்கும் குறைவான திறனில் இயங்கி வந்தது. மேலும் பெரும்பாலான எஃகு இறக்குமதிகள் (மொத்த பயன்பாட்டில் சுமார் 20%) தென் கொரியா, மெக்சிகோ மற்றும் கனடா போன்ற நாடுகளில் இருந்து பெறப்பட்டது. இன்றைய நிலையில் சீனா அமெரிக்காவின் வர்த்தகப் போட்டி நாடாகப் பார்க்கப்படுகின்றது. 2% மட்டுமே சீனாவிலிருந்து பெறப்பட்டது. சீனா அமெரிக்காவிற்கு நெருங்கிய நட்பு நாடு அன்று. ஆனாலும் அது இன்னும் அமெரிக்காவிற்கு எஃகு ஏற்றுமதி செய்து வருகிறது.

**வரைபடம் 01: 2021இல் அமெரிக்காவிற்கு எஃகு தயாரிப்புகளின் நுகர்வுக்கான இறக்குமதிகள் (மில்லியன் அமெரிக்க டொலர்களில்)**




**மூலம்:** www.statista.com

சீனாவிடம் இருந்து பெறப்படுகின்ற 2% இற்காக 25% தீர்வை விதிக்கப்பட்டதா என்கின்ற விமர்சனமும் காணப்படுகின்றது. இந்த தீர்வை விதிப்பு நடவடிக்கை குறிப்பாக தென் கொரியாவுடன் அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் சர்ச்சையை

ஏற்படுத்தியது. அவர்களின் எதிர்ப்பு தென் கொரியாவிலிருந்து எஃகு இறக்குமதியில் அனுமதிப்பங்கினை (Quotas) அறிமுகப்படுத்த வழிவகுத்தது. இந்த ஒப்பந்தத்தில், தென் கொரியா கடந்த மூன்று ஆண்டுகளில் அமெரிக்காவிற்கான எஃகு ஏற்றுமதியை அவர்களின் சராசரியில் 70% அளவில் பராமரிக்க உறுதி பூண்டுள்ளது.

## எஃகு மற்றும் அலுமினியம் மீதான ஐக்கிய அமெரிக்கத் சுங்கத் தீர்வையின் விளைவுகள்

### வேலைவாய்ப்பு

*எதிர்பார்த்த விளைவு:* சுங்கத் தீர்வைகள் போன்ற பாதுகாப்புவாத நடவடிக்கைகள் உள்நாட்டுத் தொழில்களுக்கு, குறிப்பாக எஃகுத் துறையில் வேலைகளை பாதுகாக்கும் என்கின்ற நம்பிக்கை காணப்பட்டது.

*உண்மையான விளைவு:* உத்தேசித்த இலக்கிற்கு மாறாக, பாதுகாப்புவாத நடவடிக்கைகள் உள்நாட்டு வேலைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு வழிவகுக்கவில்லை. எஃகு உற்பத்திக்குத் தேவையான தொழிலாளர்களை, வெகுவாகக் குறைத்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மட்டுப்படுத்தியது.

*எதிர்பாராத விளைவுகள்:* பாதுகாக்கப்பட்ட தொழிலில் சில வேலைகள் தக்கவைக்கப்பட்டிருந்தாலும், எஃகு நுகர்வுத் துறைகளில் வேலை இழப்புகள் ஏற்பட்டன.

### எஃகு இறக்குமதி

*எதிர்பார்த்த விளைவு:* எஃகு இறக்குமதியைக் குறைப்பதற்கும், உள்நாட்டில் எஃகு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டது.

*உண்மையான விளைவு:* சுங்கத் தீர்வைகள் மற்றும் ஒதுக்கீடுகள் போன்ற வர்த்தக நடவடிக்கைகள், நிர்ம்பல் சங்கிலிகளை சீர்குலைத்து, இறக்குமதிகளை நிர்வகிப்பதில் சிக்கல்களை உருவாக்கின. இருப்பினும், இந்த நடவடிக்கைகளால் உள்நாட்டு எஃகு தொழில்துறை கணிசமான வளர்ச்சியை அடையவில்லை.

*எதிர்பாராத விளைவுகள்:* எஃகினை ஒரு உள்ளீடாக நம்பியிருக்கும் தொழில்கள் அதிக செலவுகளை

எதிர்கொள்கின்றன. அவற்றின் போட்டித்திறன் மற்றும் இலாபங்கள் ஆகியவை பாதிக்கப்பட்டன. இறக்குமதியை நிர்வகிப்பதில் உள்ள சிக்கல்கள், நிர்வாக சவால்களுக்கும் குறைவான செயல்திறன் மிக்க வர்த்தக சூழலுக்கும் வழிவகுத்தது.

**விலை ஆதரவு**

*எதிர்பார்த்த விளைவு:* அரசாங்க மானியங்கள் அல்லது விலை ஆதரவுகளினால் அதிக விலையை பேணுவதன் மூலம் உள்நாட்டுத் தொழில்களுக்கு ஆதரவளிக்க எதிர்பார்க்கப்பட்டது.

*உண்மையான விளைவு:* விலை ஆதரவு வழிமுறைகள் அதிக உற்பத்தியை ஊக்குவிக்கிறது.

*எதிர்பாராத விளைவுகள்:* விலை ஆதரவின் விளைவாக அதிகப்படியான உற்பத்தியானது உபரி உற்பத்திக்கு வழிவகுக்கும், அது திறமையாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கலாம். அதுமட்டுமல்லாது சந்தை ஏற்றத்தாழ்வுகளுக்கு பங்களிக்கிறது மற்றும் அதிகப்படியான நிரம்பலை நிர்வகிக்க அரசாங்கத்தின் தலையீடும் தேவைப்படுகிறது.

இந்தக் கொள்கைகளின் தாக்கங்கள், பாதுகாப்புவாத நடவடிக்கைகள் எப்போதுமே அவற்றின் இலக்குகளை அடைவதில்லை என்பதைக் எடுத்துக்காட்டுகின்றது. சில குறிப்பிட்ட தொழில்களுக்கு குறுகிய கால தீர்வினை வழங்கினாலும், போட்டித்தன்மை, நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் கீழ்நிலைத் துறைகளில் வேலை இழப்புகள் போன்ற பரந்த பொருளாதார விளைவுகள் நன்மைகளை விட அதிகமாக இருக்கும்.

## படிப்பினைகள்

எ஺கு மற்றும் அலுமினியத்தின் மீது அமெரிக்கா விதித்துள்ள சுங்கத் தீர்வைகளின் அனுபவம், சர்வதேச வர்த்தகத்தின் சூழலில் பாதுகாப்புவாத நடவடிக்கைகளின் இலக்குகள் மற்றும் செயல்திறன் பற்றிய பல படிப்பினைகளை வழங்கியுள்ளது. அவற்றை வருமாறு நோக்கலாம்.

**தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கவனிப்பது முக்கியமானதாகும்:** சுங்கத் தீர்வைகள் போன்ற பாதுகாப்புவாத நடவடிக்கைகள் எதிர்பார்த்த வேலை உருவாக்கும் விளைவுகளை

அளிக்காது. குறிப்பாக தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொழிலாளர் தேவைகளை கணிசமாகக் குறைக்கும். பாதுகாப்புவாதக் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு முன், தொழில்துறையின் தன்மை மற்றும் அதன் தொழில்நுட்பப் பரப்பைப் புரிந்துகொள்வதும், சாத்தியமான வேலைவாய்ப்புத் தாக்கங்களை துல்லியமாக ஆராய்வதும் முக்கியமானதாகும்.

**நிரம்பல் சங்கிலியின் சிக்கலான தன்மையை மதிப்பிட வேண்டும்:** பாதுகாப்பு நடவடிக்கைகள் உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளை சீர்குலைத்து நிர்வாக சவால்களை உருவாக்கலாம். கொள்கை வகுப்பாளர்கள் தீர்வை வரிகளை விதிக்கும் போது இறக்குமதியை நம்பியிருக்கும் விநியோகத்தர்கள் பற்றி கருத்தில் கொள்ள வேண்டும். ஒரு தொழிற்துறையில் ஏற்படும் இடையூறுகளின் எதிர்பாராத விளைவுகள் பல்வேறு துறைகளில் பல விளைவை ஏற்படுத்தலாம்.

**பலதரப்பு ரீதியாக சிந்திக்க வேண்டும்:** இருதரப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் பதிலடி நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் மற்றும் சர்வதேச வர்த்தக உறவுகளை எதிராகப் பாதிக்கும். பலதரப்பு அணுகுமுறை, உலக வர்த்தக அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளின் மூலம் இராஜதந்திர உறவுகளை வலுவிழக்கச் செய்யாமல் மற்றும் வர்த்தக மோதல்களைத் தூண்டாமல் வர்த்தக இலக்குகளை அடைவதில் கவனமாக இருக்க வேண்டும்.

**பொருளாதாரத் திறனைப் புரிந்து கொள்ள வேண்டும்:** உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதே பாதுகாப்புவாதக் கொள்கைகளின் குறிக்கோளாக இருந்தாலும், இத்தகைய நடவடிக்கைகள் சந்தைகளைச் சிதைக்கலாம், போட்டியைக் குறைக்கலாம் மற்றும் பொருளாதாரத் திறனைத் தடுக்கலாம். கொள்கை வகுப்பாளர்கள் பாதுகாப்புவாத நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு முன், பரந்த பொருளாதார விளைவுகளுக்கு எதிராக சாத்தியமான நன்மைகளை எதிர்வுகூற வேண்டும்.

**நீண்ட கால பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும்:** பாதுகாப்புவாதம் குறிப்பிட்ட தொழில்களுக்கு குறுகிய கால தீர்வினை அளிக்கலாம், ஆனால் நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு திறந்த சந்தைகள் மற்றும் உலக வர்த்தகத்தின்

போட்டி நன்மைகளை கருத்தில் கொள்ள வேண்டும். உடனடித் துறைசார் ஆதாயங்களைக் காட்டிலும் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதன் முக்கியத்துவத்தை அமெரிக்க அனுபவம் அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

**தேசிய பாதுகாப்பு மற்றும் வர்த்தகத்தை சமநிலைப்படுத்துதல் வேண்டும்:** அமெரிக்க எஃகு கட்டணம் ஓரளவு தேசிய பாதுகாப்பு அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டாலும். அத்தகைய நியாயப்படுத்தல்களின் தாக்கங்களை கவனமாக மதிப்பிடுவது முக்கியம்.

**உரையாடல் இணைப்புக்களை ஊக்குவித்தல் வேண்டும்:** வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வர்த்தக கூட்டு நாடுகளுக்கிடையே திறந்த உரையாடல் மற்றும் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அமெரிக்க அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது. பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் தீர்வுகளைக் கண்டறிவது போன்றவற்றின் மூலம் அதிகரித்து வரும் வர்த்தக மோதல்களைத் தடுக்கலாம்.

**மாற்று வழிகளைக் ஆராய வேண்டும்:** பாதுகாப்புவாதத்தை நாடாமல் வேலை வளர்ச்சி மற்றும் தொழில் போட்டித்தன்மையை அடைய, தொழிலாளர் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த முதலீடு போன்ற மாற்று நடவடிக்கைகளை கொள்கை வகுப்பாளர்கள் ஆராய வேண்டும்.

## முடிவுரை

எஃகு மற்றும் அலுமினியத்தின் மீது அமெரிக்கா விதித்துள்ள சுங்கத் தீர்வைகள், பாதுகாப்புவாத நடவடிக்கைகளின் சிக்கலான மற்றும் எதிர்பாராத விளைவுகளை எடுத்துக்காட்டுகின்றன. உள்நாட்டுத் தொழில்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கான இலக்குகள் முக்கியமானதாகக் காணப்படினும், வர்த்தகக் கொள்கைகளை உருவாக்கும் போது உலகளாவிய நிரம்பல் சங்கிலிகள், தொழில்நுட்பப் போக்குகள் மற்றும் பரந்த பொருளாதார தாக்கங்கள் பற்றிய விரிவான புரிதல் முக்கியமானது. திறந்த சந்தைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் நன்மைகளுடன் பாதுகாப்புவாதத்தை சமநிலைப்படுத்துவது நிலையான பொருளாதார வளர்ச்சியை

அடைவதற்கும் நேரான வர்த்தக உறவுகளை வளர்ப்பதற்கும் உதவும்.

## உசாத்துணை

Abboushi, S. (2010). Trade protectionism: reasons and outcomes. *Competitiveness Review: An International Business Journal*, 20(5), 384-394.

Ahmad Nasrudin. (2022). Import Tariff: Purposes, Types, Advantages, and Disadvantages. Penpoin, [online] Available at: https://penpoin.com/import-tariff/ [23/08/2023].

American Institute of Steel Construction. (2023). Why Steel. [online] Available at: https://www.aisc.org/why-steel/tariffs/ [23/08/2023].

Chris Smith. (2019). Tariffs: Theory and Practice. House of Lords – Library Briefing, 1 – 18.

Gregory Mankiw, N. (2018). Principles of Economics, 8th ed, pp 173–5.

Paul Goodman. (2022). The Pros and Cons of Import Tariffs and Trade Protectionism. Soapboxie.com. [online] Available at: https://soapboxie.com/economy/Pros-and-Cons-of-Trade-Protectionism [23/08/2023].

World Trade Organization: Tariffs. (2015). Web.

# இணைப்பு 01: பொருளியலாளர்

## ஜேனட் லூயிஸ் யெல்லன் (Janet Louise Yellen)



ஜேனட் லூயிஸ் யெல்லன் என்பவர் ஒரு முக்கிய அமெரிக்க பொருளாதார நிபுணர் ஆவார். இவர் கல்வித்துறை, அரசியல் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் சார்ந்ததான, நீண்ட மற்றும் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளார். ஒரு பொருளாதார நிபுணராக அவரது பங்களிப்புகள் அளப்பரியதாகும். ஜேனட் லூயிஸ் யெலன் ஓகஸ்ட் 13, 1946 அன்று நியூயோர்க்கின் புரூக்ளினில் பிறந்தார். அவர் ஃபோர்ட் ஹாமில்டன் உயர்நிலைப் பாடசாலையில் (Fort Hamilton High School) பயின்றார். 1967 இல் பிரவுன் பல்கலைக்கழகத்தில் (Brown University) பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார். யேல் பல்கலைக்கழகத்தில் (Yale University) தனது கல்வியைப் பயின்று அங்கு அவர் கலாநிதிப் பட்டத்தினை (Ph.D.) 1971 இல் பெற்றுக்கொண்டார்.

இவர் ஹாவாட் பல்கலைக்கழகம் (Harvard University) மற்றும் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் (London School of Economics) ஆகியவற்றில் கற்பித்தவர். 1994 இல், ஜனாதிபதி பில் கிளிண்டனால் (Bill Clinton) ஃபெடரல் ரிசர்வ் குழுவிற்கு (Federal Reserve Board) நியமிக்கப்பட்டபோது, யெல்லனின் வாழ்க்கை பொதுச் சேவையை நோக்கித் திரும்பியது. அவர் 1997 வரை பெடரல் ரிசர்வ் வாரியத்தில் பணியாற்றினார். 2004ஆம் ஆண்டில், அவர் பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியானார். அங்கு அவர் வேலையின்மை மற்றும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்த்துப் போராடுவதற்கு பணக் கொள்கையைப் பயன்படுத்துவதற்கான வலுவான ஆதரவிற்காக நற்பெயரைப் பெற்றார்.

ஜேனட் யெல்லன், 2014ஆம் ஆண்டில் ஜனாதிபதி பராக் ஒபாமாவால் (Barack Obama) பெடரல் ரிசர்வின் தலைவராக பரிந்துரைக்கப்பட்டார். வரலாற்றில் இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் அவர் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 2018 இல் தலைவராக தனது பதவிக் காலத்தை நிறைவு செய்தார். ஒரு சிறந்த பொருளியல் நிபுணராக 2008 நிதி நெருக்கடியின் பின்விளைவுகளால் குறிக்கப்பட்ட ஒரு சவாலான காலகட்டத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தை வழிநடத்துவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

2021ஆம் ஆண்டில், ஜனாதிபதி ஜோ பைடனின் (Joe Biden) நிர்வாகத்தின் கீழ் அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளராக (Secretary of the Treasury) பணியாற்றிய முதல் பெண்மணி என்ற பெருமையை ஜேனட் யெலன் மீண்டும் உருவாக்கினார். இந்தப் பதவி வகிப்பில் COVID-19 தொற்றுநோயால் ஏற்படும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதிலும், பொருளாதார மீட்சியைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்ட நிதிக் கொள்கைகளை உருவாக்குவதிலும், தொற்றுநோயின் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதிலும் அவர் முக்கிய பங்கு வகித்தார். இவர் பொருளாதாரத்தில் பெண்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

> நான் கடற்கரைக்குச் செல்வதில்லை. கடற்கரைக்குச் செல்வதில் எந்தப் பெறுமதியும் இல்லை. நான் அவ்வாறு சென்றிருந்தால், அங்கு பொருளியல் புத்தகங்களையே வாசித்திருப்பேன்.
>
> 
>
> I don't go to the beach. There is no value in going to the beach. If I did go, I would probably read economics books.
>
> - Esther Duflo -


## இணைப்பு 02: புள்ளிவிபர இணைப்புக்கள்

### இலங்கையின் மொத்தச் சனத்தொகை

### Total Population of Sri Lanka

| வருடம் | மொத்தச் சனத்தொகை (மில்லியன்) | வருடம் | மொத்தச் சனத்தொகை (மில்லியன்) |
|---|---|---|---|
| 2013 | 21,131,756 | 2018 | 21,670,000 |
| 2014 | 21,239,457 | 2019 | 21,803,000 |
| 2015 | 21,336,697 | 2020 | 21,919,000 |
| 2016 | 21,425,494 | 2021 | 22,156,000 |
| 2017 | 21,506,813 | 2022 | 22,181,000 |

**மூலம்:** The World Bank (2023)




# இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (வருடாந்த வீதம்)

## GDP Growth of Sri Lanka (Annual %)

| வருடம் | GDP வளர்ச்சி (வருடாந்த வீதம்) | வருடம் | GDP வளர்ச்சி (வருடாந்த வீதம்) |
|---|---|---|---|
| 2013 | 4.1 | 2018 | 2.3 |
| 2014 | 6.4 | 2019 | -0.2 |
| 2015 | 4.2 | 2020 | -4.6 |
| 2016 | 5.1 | 2021 | 3.5 |
| 2017 | 6.5 | 2022 | -7.8 |

**மூலம்:** The World Bank (2023)




## இலங்கையின் மொத்த வேலையின்மை (மொத்த ஊழியப்படையின் வீதம்)

## Total Unemployment of Sri Lanka (% of Total Labor Force)

| **வருடம்** | **மொத்த வேலையின்மை** (மொத்த ஊழியப்படையின் வீதம்) | **வருடம்** | **மொத்த வேலையின்மை** (மொத்த ஊழியப்படையின் வீதம்) |
|---|---|---|---|
| 2013 | 4.2 | 2018 | 4.3 |
| 2014 | 4.2 | 2019 | 4.7 |
| 2015 | 4.5 | 2020 | 5.2 |
| 2016 | 4.2 | 2021 | 5.2 |
| 2017 | 4 | 2022 | 6.7 |

**மூலம்:** The World Bank (2023)




# இலங்கையின் பணவீக்கம் - நுகர்வோன் விலைகள் (வருடாந்த வீதம்)

# Inflation – Consumer Prices of Sri Lanka (Annual %)

| **வருடம்** | **பணவீக்கம்** (வருடாந்த வீதம்) | **வருடம்** | **பணவீக்கம்** (வருடாந்த வீதம்) |
|---|---|---|---|
| 2013 | 6.9 | 2018 | 2.1 |
| 2014 | 3.2 | 2019 | 3.5 |
| 2015 | 3.8 | 2020 | 6.2 |
| 2016 | 4 | 2021 | 7 |
| 2017 | 7.7 | 2022 | 49.7 |

**மூலம்:** The World Bank (2023)




## இலங்கையின் தனிநபர் பணவனுப்பல்களின் பெறுகை (மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம்)

## Personal Remittances - Recived of Sri Lanka (% of GDP)

| வருடம் | தனிநபர் பணவனுப்பல்கள் (% of GDP) | வருடம் | தனிநபர் பணவனுப்பல்கள் (% of GDP) |
|---|---|---|---|
| 2013 | 8.3 | 2018 | 7.5 |
| 2014 | 8.5 | 2019 | 7.6 |
| 2015 | 8.2 | 2020 | 8.5 |
| 2016 | 8.3 | 2021 | 6.2 |
| 2017 | 7.6 | 2022 | 5.1 |

மூலம்: The World Bank (2023)



# கூர்மை

பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை

வெளியீடு (5), 2023

தங்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் விமர்சனங்கள் ஆகியவற்றை அனுப்பவேண்டிய முகவரி


**ஆசிரியர்,**
கூர்மை,
பொருளியல் ஆண்டுச் சஞ்சிகை,
பொருளியல் துறை,
வர்த்தக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

**T. No:** 065-2240735

**E-mail:** editorcoormai@gmail.com